


PRGI No. TNBIL/25/A1569

# வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 262 04.05.2026 திங்கள்கிழமை

Chennai Volume: 01 Issue: 262 Monday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

திங்கள்கிழமை
(04-05-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-21
பிறை: தேய்பிறை
திதி
திருதியை மறுநாள் விடியற்காலை 4.41 வரை பிறகு சதுர்த்தி,

நட்சத்திரம்:
அனுஷம் காலை 9.29 வரை பிறகு கேட்டை

யோகம்
சித்த யோகம்
ராகுகாலம்
காலை 7.30-9.00 மணி.
எமகண்டம்
காலை 10.30 – 12.00 மணி
சூலம் – கிழக்கு
நல்ல நேரம் :
காலை 6-7 மணி.
மாலை 3-4 மணி.

மேஷம் ................. நிம்மதி
ரிஷபம் ................. நிறைவு
மிதுனம் ................. பரிசு
கடகம் ................. பணிவு
சிம்மம் ................. தாமதம்
கன்னி ................. களிப்பு
துலாம் ................. கடமை
விருச்சிகம் ................. சுபம்
தனுசு ................. அமைதி
மகரம் ................. ஆர்வம்
கும்பம் ................. இரக்கம்
மீனம் ................. இன்பம்

# 5 மாநிலத் தேர்தல்: இன்று வாக்கு எண்ணிக்கை

## காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும்





**சென்னை, மே 4:**

தமிழகத்தில் உள்ள 234 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு ஏப். 23-ஆம் தேதி நடைபெற்றது. தேர்தலில் பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு மத்திய பாதுகாப்புப் படையினர் மற்றும் மாநில போலீஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

வாக்கு எண்ணிக்கை திங்கள்கிழமை நடைபெறவுள்ள நிலையில், அதுதொடர்பான இறுதிக்கட்ட ஏற்பாடுகள் குறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்குடன் இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் சனிக்கிழமை காணொலி மூலம் ஆலோசனை நடத்தினர்.

இதைத் தொடர்ந்து, தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை திங்கள்கிழமை நடைபெறவுள்ளது. 75,064 வாக்குச் சாவடிகளில் பதிவான வாக்குகள் மற்றும் தபால் வாக்குகள் எண்ணிக்கை 62 வாக்கு எண்ணும் மையங்களில் நடைபெறவுள்ளது.

மொத்தமாக 234 அறைகள் வாக்கு எண்ணிக்கைக்காக அமைக்கப்பட்டுள்ளன. தபால் வாக்குகள், மின்னணு முறையில் அனுப்பப்பட்ட தபால் வாக்குகளை எண்ண கூடுதலாக 240 அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணிக்கைக்காக மொத்தம் 3,324 மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வாக்கு எண்ணும் பணிக்காக தமிழகம் முழுவதும் 10,545 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். வெளிப்படைத்தன்மையை உறுதி செய்ய 4,624 நுண் பார்வையாளர்கள், வாக்கு எண்ணிக்கையை மேற்பார்வையிட ஒவ்வொரு தொகுதிக்கும் ஒருவர் என மொத்தம் 234 வாக்கு எண்ணும் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும். முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படும். தபால் வாக்குகளை எண்ண ஒவ்வொரு 500 வாக்குகளுக்கும் ஒரு வாக்கு எண்ணும் மேஜை அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக 1,135 கூடுதல் உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

செயலியிலும் தேர்தல் முடிவுகள்...: வாக்கு எண்ணிக்கை குறித்த விவரங்கள் சட்டப்பேரவைத் தொகுதி வாரியாக ECINET என்ற கைப்பேசி செயலியிலும், HTTPS://RESULTS.ECI.GOV.IN/ என்ற இணையதளத்திலும் தெரிந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுவையில்... புதுவை யூனியன் பிரதேசத்தில் மொத்தம் உள்ள 30 தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு ஏப். 9- ஆம் தேதி நடைபெற்றது. இதில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பதிவு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன. வாக்கு எண்ணும் மையங்களுக்கு மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பிற மாநிலங்களில்... மேற்கு வங்கத்தில் உள்ள 294 தொகுதிகளுக்கு இரு கட்டங்களாக ஏப்ரல் 23-ஆம் தேதி, ஏப்ரல் 29-ஆம் தேதிகளில் தேர்தல் நடைபெற்றது. அஸ்ஸாம் சட்டப்பேரவையில் உள்ள 126 தொகுதிகளுக்கும், கேரள சட்டப்பேரவையில் உள்ள 140 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 9-ஆம் தேதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெற்றது. இந்த மாநிலங்களிலும் வாக்கு எண்ணிக்கைக்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அனைத்துவாக்குஎண்ணிக்கை மையங்களிலும் மூன்றடுக்கு பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளன.

முதல் அடுக்கில் வாக்கு எண்ணும் மையத்தைச் சுற்றியும் 100 மீட்டரில் இருந்து பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டுள்ளது. முதல் அடுக்கில் நுழைவதற்கு தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும்.

இரண்டாவது அடுக்கில் கைப்பேசிகள் மற்றும் பிற தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

மூன்றாவது அடுக்கில் வாக்கு எண்ணும் அறைகள் மற்றும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வைத்துள்ள பாதுகாப்பு அறைகள் இருப்பதால் கைப்பேசிகள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட பொருள்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்படும்.

உள்ளூர் காவல் துறை மற்றும் மாநில ஆயுதப் படையினருடன் கூடுதலாக, மத்திய ஆயுதக் காவல் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். வாக்கு எண்ணும் மையங்களுக்குள் இந்திய தேர்தல் ஆணையம் வழங்கிய க்யூஆர் குறியீட்டுடன் கூடிய புகைப்பட அடையாள அட்டை இருப்பவர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்படும். இந்த க்யூஆர் குறியீட்டுடன் கூடிய புகைப்பட அடையாள அட்டையை வாக்கு எண்ணும் மையங்கள் மற்றும் அறைகளுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர்கள், வாக்கு எண்ணும் பணியாளர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணும் முகவர்கள் உள்ளிட்ட அனைவரும் கட்டாயம் வைத்திருக்க வேண்டும் என தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

## வாக்கு எண்ணிக்கை: பாதுகாப்புக்கு 1 லட்சம் போலீஸார்



**சென்னை, மே 4:**

தமிழகத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் விளக்கினார்.

"தமிழகத்தில் 62 மையங்களில் 65 கம்பெனி துணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். 18 ஆயிரம் போலீஸாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மாநிலம் முழுவதும் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க சுமார் 1 லட்சம் போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொகுதிக்கு ஒரு வாக்கு எண்ணிக்கை பார்வையாளர் என 234 பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்" என்று அவர் தெரிவித்தார்.

முழு அமைதி, பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தமிழகம் முழுவதும் நாளை மதுக்கடைகளை மூடவும் அவர் உத்தரவிட்டுள்ளார். தமிழகத்தில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் 62 மையங்களில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், குடிநீர், கழிவறை, ஒளி, ஒலி வசதிகள், மின் இணைப்பு தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஆய்வு செய்தனர்.

# தமிழக சட்டப்பேரவை தேர்தலில் 4.87 கோடி வாக்குகள் பதிவு: அதிகாரபூர்வ அறிவிப்பு

**சென்னை, மே 4:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு கடந்த ஏப்.23-ஆம் தேதி நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் குறித்த முழு விவரத்தை தேர்தல் ஆணையம் சனிக்கிழமை வெளியிட்டது.

234 தொகுதிகளில் 2,77,38,925 ஆண் வாக்காளர்கள், 2,89,60838 பெண் வாக்காளர்கள், 7,617 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 5,67,07,380 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். அவர்களில் 2,35,34,720 ஆண் வாக்காளர்கள், 2,52,59,596 பெண் வாக்காளர்கள், 4,517 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 4,87,98,833 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

தலைவர்கள் தொகுதிகளில்....: முதல்வர் மு.க.ஸ்டாலின் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதியில் 86.12 சதவீதம் வாக்குகள் பதிவாகி இருந்த நிலையில், 94,278 பெண்கள், 88,085 ஆண்கள், 19 மூன்றாம் பாலினத்தவர் வாக்களித்துள்ளனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் போட்டியிட்ட சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதியில் 84.28 சதவீத வாக்குகள் பதிவான நிலையில், 71,820 பெண்கள், 68,057 ஆண்கள், 46 மூன்றாம் பாலினத்தவர் வாக்களித்துள்ளனர்.

அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி போட்டியிட்ட எடப்பாடி தொகுதியில் 92.08 சதவீத வாக்குகள் பதிவான நிலையில், 1,25,830 பெண்கள், 1,28,634 ஆண்கள், 24 மூன்றாம் பாலினத்தவர் வாக்களித்துள்ளனர்.

தவெக தலைவர் விஜய் போட்டியிட்ட பெரம்பூர் தொகுதியில் 89.74 சதவீத வாக்குகள் பதிவான நிலையில், 1,04,560 பெண்கள், 98,471 ஆண்கள், 41 மூன்றாம் பாலினத்தவர் வாக்களித்துள்ளனர். விஜய் போட்டியிட்ட மற்றொரு தொகுதியான திருச்சி கிழக்கில் 81.77 சதவீத வாக்குகள் பதிவான நிலையில், 93,209 பெண்கள், 86,806 ஆண்கள், 36 மூன்றாம் பாலினத்தவர் வாக்களித்துள்ளனர்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் போட்டியிட்ட காரைக்குடி தொகுதியில் 1,23,455 பெண்கள், 1,03,529 ஆண்கள், 15 மூன்றாம் பாலினத்தவர் வாக்களித்துள்ளனர். அதிகபட்சமாக சோழிங்கநல்லூர் தொகுதியில் 2,26,977 பெண்கள் வாக்களித்துள்ளனர்.

# டில்லியில் ஏசி வெடித்து தீ விபத்து: 9 பேர் பலி!

**புதுடெல்லி, மே 4:**

டில்லியில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏசி வெடித்த விபத்தில் 9 பேர் பரிதாபமாக பலியாகினர்.

தேசிய தலைநகர் தில்லியின் கிழக்குப் பகுதியான ஷாதாராவின் விவேக் விஹாரில் உள்ள நான்கு மாடி குடியிருப்பு கட்டடத்தில் நேரிட்ட தீ விபத்தில் ஒன்பது பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும், இந்தச் சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்தனர்.

தீவிபத்து சம்பவம் குறித்த அதிகாலை 3.47 மணிக்கு தீயணைப்புத் துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது.

தீ விபத்து குறித்த தகவல் கிடைத்ததை அடுத்து, சுமார் 14 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தன. இதுவரை பத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர்.

பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. முதற்கட்ட விசாரணையில், ஏசி வெடித்ததால் இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என காவல் துறையினர் தெரிவித்தனர்.

தீ தற்போது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. கட்டடத்தின் உள்ளிருந்து 10 முதல் 15 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாகவும், அவர்களில் இருவர் லேசான காயங்களுடன் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அவசரமாகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் மீட்புப் படையினர் தெரிவித்தனர்.

# யு.பி.ஐ. டிஜிட்டல் பண பரிவர்த்தனை பயன்பாடு 10 ஆண்டுகளில் 3,140 மடங்கு அதிகம்

**சென்னை, மே 4:**

இந்தியாவின் பணப்புழக்கத்தை மாற்றி அமைத்த ஒரு புரட்சிகரமான நடவடிக்கைதான் 'யு.பி.ஐ.' (யுனிபைடு பேமென்ட்ஸ் இன்டர்பேஸ்) என்று கூறப்படும் டிஜிட்டல் பண பரிவர்த்தனை ஆகும். வங்கிகள் மற்றும் ஏ.டி.எம். வசதி இல்லாத கிராமப்புற மக்களும், எளிய செல்போன் மூலம் வங்கி சேவையை பெற வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

2016-17-ல் அடித்தளம் போடப்பட்ட இந்த பண பரிவர்த்தனை பயன்பாடு, ஒவ்வொரு ஆண்டும் அதிகரிக்க தொடங்கியது. 2017-18-ல் ரூ.1.1 லட்சம் கோடி மதிப்பிலான பண பரிவர்த்தனை நடந்தது.




அதனைத்தொடர்ந்து 2018-19-ல் ரூ.8.8 லட்சம் கோடி மதிப்பிலான பண பரிவர்த்தனையாக இது உயர்ந்தது. இதனைத்தொடர்ந்து 2019-20-ல் டிஜிட்டல்மயமாக்குதலில் நாடு வேகம் காட்டியது. இந்த வேகத்தால், 2020-21-ல் பண பரிவர்த்தனை ரூ.41 லட்சம் கோடி மதிப்பில் நடந்தது. அதன்பிறகு கொரோனா காலத்தில் இந்த டிஜிட்டல் பண பரிவர்த்தனை பெருமளவில் கைகொடுத்தது. அந்த கால கட்டத்தில்தான் இதன் வளர்ச்சியும், தேவையும் அதிகமாக இருந்தது. தொடர்ந்து 2022-23-ல் டிஜிட்டல் பண பரிவர்த்தனையில் அசுர வளர்ச்சி காணப்பட்டது. அதன்பின்னரும் டிஜிட்டல் பண பரிவர்த்தனை பயன்பாடு அதிகரித்தபடியே இருக்கிறது. கடந்த 2025-26-ம் ஆண்டில் ரூ.314 கோடி மதிப்பிலான பரிவர்த்தனை நடந்திருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த நிதியாண்டில் மட்டும் 24,162 கோடி முறை பரிவர்த்தனை நடந்திருக்கிறது. தினமும் சராசரியாக சுமார் 60 கோடி பரிவர்த்தனைகள் நடந்துள்ளன.

கடந்த 2016-17 நிதியாண்டு முதல் 2025-26 நிதியாண்டு வரையிலான இடைப்பட்ட இந்த 10 ஆண்டுகளில் 'யு.பி.ஐ.' பரிவர்த்தனை பயன்பாடு 3,140 மடங்கு அதிகரித்துள்ளதை இந்த புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

2026-27-ம் ஆண்டில் இதன் மதிப்பு ரூ.368 லட்சம் கோடி அளவுக்கு இருக்கும் என கணிக்கப்பட்டிருக்கிறது. எளிமையான பயனர் பயன்பாடு, பூஜ்ஜிய பரிவர்த்தனை கட்டணம், சிறிய பெட்டிக்கடை முதல் பெரிய வணிக வளாகங்கள் வரை யு.பி.ஐ. பயன்பாடு பரவியது. குறைந்த விலையில் செல்போன் மற்றும் மலிவான இணைய சேவை போன்றவற்றால் இந்த வளர்ச்சி சாத்தியம் ஆகியுள்ளது.




## குறைந்த வயதில் உலக சாதனை பால்க் நீரிணையை நீந்தி கடந்த ராஞ்சி சிறுவன்



**ராமேஸ்வரம், மே 04:** ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சி மாவட்டத்தில் உள்ள துர்வா பகுதியை சேர்ந்த இஷாங்க் சிங் (7), இளம் வயதிலேயே நீச்சல் பயிற்சி பெற்று, பல போட்டிகளில் பங்கேற்று அனைவரையும் வியக்க வைத்தான். இந்நிலையில் ஆபத்து நிறைந்த பால்க் நீரிணையை நீந்தி கடப்பதற்காக துர்வா அணையில் தீவிர பயிற்சி மேற்கொண்டான்.

பின்னர் வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில், இருள் சூழ்ந்த நேரத்தில், இலங்கையின் தலைமன்னார் கடற்பகுதியிலிருந்து பால்க் நீரிணையில் இஷாங்க் தனது நீச்சல் சாதனை பயணத்தைத் தொடங்கினான். நடுக்கடலில் ஆக்ரோஷமான அலைகள், கடும் நீரோட்டம் எனப் பல தடைகள் இருந்தன.

இஷாங்க் எதற்கும் அஞ்சாமல் விடாமுயற்சியுடன் நீந்தினான். சுமார் 29 கிலோமீட்டர் தூரத்தை 9 மணி நேரம் 50 நிமிடங்களில் கடந்து, மதியம் 1.50 மணிக்கு இந்தியாவின் தனுஷ்கோடியை வந்தடைந்தான்.

இஷாங்கின் இந்த சாதனையை அங்கீகரித்து யுனிவர்சல் ரெக்கார்ட்ஸ் போரம் (URF) உலக சாதனை சான்றிதழை வழங்கியது. மிகக் குறைந்த வயதில் பால்க் நீரிணையை நீந்திக் கடந்த முதல் சிறுவன் என்ற பெருமையை இஷாங்க் பெற்றான்.

## புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் – அருகே வாக்கு எண்ணும் மையம் உள்ளதால் பரபரப்பு



**புதுக்கோட்டை, மே 04:** புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குகளை பதிவு செய்ய பயன்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், புதுக்கோட்டை அரசு மகளிர் கலை கல்லூரியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அங்கு மூன்றெடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு, தீவிர கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்த வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு அருகில், சுமார் 500 மீட்டர் தொலைவில் மாவட்ட கலெக்டர் அலுவலகம் உள்ளது. இந்த நிலையில், புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்திற்கு இன்று மின்னஞ்சல் மூலமாக மிரட்டல் ஒன்று வந்துள்ளது. அதில், இன்னும் சற்று நேரத்தில் கலெக்டர் அலுவலகத்தில் வெடிகுண்டு வெடிக்கும் என்று கூறப்பட்டிருந்தது.

இது குறித்து உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நிலையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா உத்தரவின் பேரில், வெடிகுண்டு நிபுணர்கள் கலெக்டர் அலுவலகத்திற்கு விரைந்து சென்றனர். அவர்கள் மோப்ப நாய்களின் உதவியோடு அங்கு தீவிர சோதனை நடத்தினர்.

ஏற்கனவே கடந்த 10 நாட்களில் இரண்டு முறை புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. அப்போது நடத்தப்பட்ட சோதனைகளில் வெடிகுண்டு மிரட்டல் போலியானது என்பது உறுதிசெய்யப்பட்டது. இந்நிலையில், நாளைய தினம் வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ள சூழலில், நேற்று கலெக்டர் அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ஆங்கில கால்வாய் வழியாக இங்கிலாந்து செல்ல முயன்ற அகதிகள்; படகு கவிழ்ந்து விபத்து – 2 பேர் உயிரிழப்பு



**பாரிஸ், மே 04:** பிரான்ஸ் நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள ஹார்டிலாட் கடற்கரையில் இருந்து நேற்று இரவு படகு ஒன்று 82 அகதிகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. அவர்கள் ஆங்கில கால்வாய் வழியாக இங்கிலாந்து செல்ல திட்டமிட்டிருந்தனர்.

இந்நிலையில், அந்த கடலில் சில கிலோ மீட்டர்கள் தூரம் சென்ற பிறகு, திடீரென ராட்சத அலைகளில் சிக்கி படகு கவிழ்ந்தது. இதனிடையே, பிரான்ஸ் கடற்படை காவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த அகதிகளை காப்பாற்றினர்.

இந்த சம்பவத்தில் 2 பேர் உயிரிழந்த நிலையில், 16 பேர் படுகாயம் அடைந்தனர். மீட்கப்பட்ட அனைவரையும் பிரான்ஸ் கடற்படையினர் பத்திரமாக அழைத்து வந்தனர். கடந்த ஒரு மாதத்தில் ஆங்கில கால்வாய் வழியாக இங்கிலாந்து செல்ல முயன்ற அகதிகள் படகு விபத்தில் சிக்கியிருப்பது இத்துடன் மூன்றாவது சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு முழுவதும் என்ஜினீயரிங் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்ப பதிவு தொடங்கியது



**சென்னை, மே 04:** தமிழ்நாட்டில் உள்ள என்ஜினீயரிங் கல்லூரிகளில் 2026-ம் ஆண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு தொடங்கியது.

தமிழ்நாட்டில் 11 அரசு என்ஜினீயரிங் கல்லூரிகள், 3 அரசு உதவிப்பெறும் என்ஜினீயரிங் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழகத்தின் 4 வளாக கல்லூரிகள், 16 அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள், மத்திய அரசின் 3 பொறியியல் கல்லூரிகள் ஆகியவை அண்ணா பல்கலைக்கழகத்தின் அங்கீகார இணைவு பெற்று இயங்கி வருகின்றன.

2025-26-ம் கல்வி ஆண்டின் தரவுகள்படி 89 தன்னாட்சி பொறியியல் கல்லூரிகள், 368 சுயநிதி பொறியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மேலும் அண்ணாமலைப் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும் இயங்கி வருகிறது.

இந்தக் கல்லூரிகளில் பி.இ. பி.டெக், பி.ஆர்க் படிப்புகளில் உள்ள இடங்களுக்கு ஒற்றை சாளர முறையில் தமிழ்நாடு என்ஜினீயரிங் மாணவர் சேர்க்கைக் குழு ஆன்லைன் வழியாக விண்ணப்பம் பெற்று, கலந்தாய்வின் மூலம் மாணவர் சேர்க்கையை ஒவ்வொரு வருடமும் நடத்தி வருகிறது.

அந்த வகையில், 2026-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு என்ஜினீயரிங் படிப்பிற்கான மாணவர் சேர்க்கை இன்று தொடங்கி உள்ளது. 12-ம் வகுப்பு முடித்தவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் சேர்க்கைப் பெற ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம், கலந்தாய்வு உள்ளிட்ட விவரங்களை www.tneaonline.org என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் மாணவர்கள், பெற்றோர்கள் அறிந்து கொள்ளலாம்.

ஆன்லைன் விண்ணப்பப் பதிவு இன்று முதல் அடுத்த மாதம் (ஜூன்) 2-ந்தேதி வரை நடைபெறுகிறது.

அசல் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்ய ஜூன் 6-ந்தேதி கடைசி நாள் ஆகும். விண்ணப்பித்தவர்களுக்கான ரேண்டம் எண் ஜூன் 5-ந்தேதி வெளியிடப்படும். தொடர்ந்து ஜூன் 8-ந்தேதி முதல் 20-ந்தேதி வரை இணையதளம் வாயிலாக சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறும்.


இதை தொடர்ந்து ஜூன் 29-ந்தேதி தரவரிசை பட்டியல் வெளியிடப்படும். இணையதள வசதி இல்லாத மாணவர்கள் பயன்பெறும் வகையில் விண்ணப்பப் பதிவு மற்றும் கலந்தாய்வில் கலந்துகொள்ள உதவுவதற்காக தமிழ்நாடு முழுவதும் 110 தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை சேவை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதன் முகவரி மற்றும் தொடர்பு எண்கள் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

மாணாக்கர்கள் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை தொலைபேசி மூலம் தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டி 10 இணைப்புகளுடன் கூடிய அழைப்பு மையம் தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அழைப்பு எண்: 1800-425-0110.

மேலும், மாணவ-மாணவிகள் tneacare@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாக தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

கடந்த ஆண்டு (2025) கலந்தாய்வில் பங்கேற்ற கல்லூரிகளின் எண்ணிக்கை 443, மொத்த இடங்களின் எண்ணிக்கை 2,54,585. மாணாக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கை 2,20,841. இது, இதற்கு முந்தைய ஆண்டை (2024) விட 23.67 சதவீதம் அதிகம் ஆகும் என்று தொழில்நுட்ப கல்வி இயக்கக இயக்குனர் தெரிவித்து உள்ளார்.

## இளையான்குடி சிவன் கோவிலில் எம்பிரான் மாறநாயனார் திருகூட்டம் சார்பில் திருவாசகம் முற்றோதல் பக்தர்கள் வழிபாடு



**மானாமதுரை, மே 04:** சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் உள்ள சிவகங்கை தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்ட ஸ்ரீ ஞானாம்பிகை சமேத ராஜேந்திர சோழிஸ்வரர் கோவிலில் இளையான்குடி எம்பிரான் மாறநாயனார் திருகூட்டம் சார்பில் சித்திரை மாத திருவாசக முற்றோதல் வழிபாடு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் அடியார் பெருமக்கள் காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை திருவாசகம் முற்றோதல் நடத்தினார்கள். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். பக்தர்கள் அனைவருக்கும் சென்னை ஆன்மிக மலர் டிரஸ்ட் சார்பில் வெளியிடப்பட்ட மதுரை சித்திரைத் சிறப்பிதழ்கள் வழங்கப்பட்டது.

முன்னதாக ராஜேந்திர சோழிஸ்வரர், ஞானாம்பிகை மற்றும் எம்பிரான் மாறநாயனார் புனித வதிக்கு சிறப்பு பூஜைகள் தீபாராதனை நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை எம்பிரான் இளையான்குடி மாறநாயனார் அடியார் திருக்கூட்டத்தினர் செய்து இருந்தனர்.

திருவாசக முற்றோதல் வழிபாடு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அடியார் பெருமக்கள் அனைவருக்கும் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது.



## திருச்செந்தூரில் 2-வது நாளாக உள்வாங்கிய கடல்




**திருச்செந்தூர், மே 04:** அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர். இங்குள்ள கடலில் புனித நீராடிவிட்டு சாமி தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இதனிடையே, ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை, பவுர்ணமி நாட்கள் மற்றும் அதற்கு முன்தினம், மறுதினங்களில் காலையில் கடல் உள்வாங்குவதும், மாலையில் இயல்பு நிலைக்கு திரும்புவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், திருச்செந் தூரில் நேற்று 2-வது நாளாக கடல் உள்வாங்கியது. சுமார் 50 அடி தூரத்திற்கு கடல் உள்வாங்கியதால் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தன. எனினும், பக்தர்கள் எவ்வித அச்சமுமின்றி கடலில் புனித நீராடியும், செல்பி எடுத்தும் மகிழ்ந்தனர்.

கடல் உள்வாங்கியுள்ள நிலையில் பக்தர்கள் பாதுகாப்பாக கடலில் குளிக்கும்படி கோவில் நிர்வாகம், காவல்துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## 13 பேர் உயிரிழந்த ஜபல்பூர் படகு விபத்தில் மீட்புப் பணி நிறைவு



**போபால், மே 04:** மத்திய பிரதேச மாநில ஜபல்பூர் மாவட்டத்தில் பர்கி அணையில் கடந்த வியாழக்கிழமை அன்று சுற்றுலா படகு கவிழ்ந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்று (மே 3) காலை தமிழகத்தை சேர்ந்த காமராஜ் (39), மயூரன் (5) ஆகியோரது உடல்கள் மீட்கப்பட்டது.

விபத்தில் சிக்கிய படகில் சுமார் 41 பேர் பயணித்ததாக அம்மாநில போலீஸார் தகவல் தெரிவித்துள்ளனர். இதில் 28 பேர் மீட்கப்பட்டனர். 13 பேர் உயிரிழந்தனர். சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் போலீஸார் இந்த தகவலை அளித்துள்ளனர்.

விபத்தில் சிக்கிய சுற்றுலா படகு, மத்திய பிரதேச அரசின் சுற்றுலா துறையால் இயக்கப்பட்டு வந்தது. இந்த படகு சுமார் 20 ஆண்டு காலம் பயன்படுத்தப்பட்டு வந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. கடந்த 2006-ல் இந்த கப்பல் கட்டப்பட்டது. விபத்தை அடுத்து அதற்கு காரணமான மூவர் மீது அம்மாநில அரசு நடவடிக்கை எடுத்தது.

படகை இயக்கியவர்களின் அலட்சியம்தான் இந்த விபத்துக்கு காரணம் எனத் தெரியவந்துள்ளது. இந்த சம்பவத்தை நேரில் பார்த்தவர்களும் உறுதி செய்துள்ளனர். இது தொடர்பாக வெளியான வீடியோவில் படகுப் பயணங்களின்போது செய்ய வேண்டிய அடிப்படை பாதுகாப்பு விதிகளைக் கூட விபத்தில் சிக்கிய படகை இயக்கிய ஊழியர்கள் பின் பற்றவில்லை என்று தெரிய வந்துள்ளது.

மீட்புப் பணி நிறைவு: இந்தச் சூழலில் நேற்று (மே 3) படகு விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணி நிறைவடைந்ததாக ஜபல்பூர் மாவட்ட ஆட்சியர் ராகவேந்திரா சிங் எக்ஸ் தளத்தில் ட்வீட் செய்துள்ளார். மீட்புப் பணியில் அயராது உழைப்பை செலுத்திய பல்வேறு துறையினருக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார். இந்த விபத்து குறித்து விரிவான விசாரணைக்கு மத்தியப் பிரதேச அரசு உத்தரவிட்டுள்ளது.

# முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியதேவர் பிறந்தநாள்



**மதுரை மே 04:** முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியதேவர் (கி. பி. 12501284) பாண்டியர் வரலாற்றின் உச்சகட்டத்தை உருவாக்கிய மாமன்னன். சோழர்களில் இராசராசசோழன் எவ்வாறு பேரரசை நிறுவி புகழ் பெற்றாரோ, அதேபோல் பாண்டிய மரபில் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சியும் வீரமும் ஒப்பற்றதாகும். இவர் கி.பி. 1250ஆம் ஆண்டு முடிசூடி, மிகக் குறுகிய காலத்திலேயே பாண்டியப் பேரரசை மறுமலர்ச்சியடையச் செய்தார். இவரது கல்வெட்டுகள் "பூமலர்வளர் திகழ்" எனத் தொடங்கும் தமிழ் மெய்க்கீர்த்தியையும், "சமஸ்தஜகத் ஆதார" எனத் தொடங்கும் வடமொழி மெய்க்கீர்த்தியையும் கொண்டுள்ளன. இது இவரது ஆட்சியின் பரந்த விரிவையும் அரச ஆற்றலையும் வெளிப்படுத்துகிறது. சடையவர்மன் சுந்தரபாண்டியன் யுத்தங்களில் ஒப்பற்ற வீரன். போசள அரசன் வீரசோமேசுவரனை விரட்டியடித்து, அவனது படைத்தலைவன் சிங்கணனையும் வஞ்சகமான சேமனையும் அழித்தார். கண்ணனூர் கொப்பம் போன்ற முக்கிய மையங்களை கைப்பற்றினார். இலங்கை மன்னன் கப்பம் செலுத்த மறுத்தபோது, இலங்கையை வென்று அடக்கியதால் "இலங்கையை அழித்த இரண்டாவது இராமன்" என்ற பெருமை பெற்றார். காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனை பலமுறை தோற்கடித்து, அவனது தலைநகரை கைப்பற்றினார்.

பின்னர் சிதம்பரம் நடராஜர் கோவில் சென்று நடராஜரை வணங்கி, அங்குள்ளமேலைக்கோபுரத்தை கட்டியமைத்தார். காகதீய மன்னன் கணபதியை வென்று நெல்லூரில் வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் செய்து கொண்டார்.

தெலுங்கு சோழ மன்னன் வீரகண்ட கோபாலனை தோற்கடித்து காஞ்சிபுரத்தையும் கைப்பற்றியதால் "காஞ்சிபுரம் கொண்டான்" என்ற பட்டம் பெற்றார். இவர் தனது பேரரசை கொங்கு நாடு, மகதை மண்டலம், திருவாங்கூர் வரை விரிவுபடுத்தினார். இவரது கல்வெட்டுகள் சோழமண்டலம் முதல் தொண்டைமண்டலம் வரை பரவலாகக் காணப்படுவது, பாண்டிய பேரரசின் உச்ச வளர்ச்சியை நிரூபிக்கிறது. முக்கியமாக, இவரது வாழ்க்கையில் "தோல்வி" என்ற சொல் இடம்பெறவில்லை என்று வரலாற்று ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர் — எந்தப் போரிலும் பின்னடைவு காணாத மாமன்னனாக இவர் விளங்கினார். பக்தி மற்றும் தர்மத்தில் இவருக்கு இணை இல்லை. திருவரங்கம் ரங்கநாதசுவாமி கோவில் மற்றும் சிதம்பரம் ஆகிய தலங்களில் துலாபாரம் செய்து, பொன்னையும்செல்வங்களையும் அர்ப்பணித்தார். உலக வரலாற்றிலேயே அரிதான "கஜ துலாபாரம்" — அதாவது யானையுடன் சமமாக தன்னை எடைபோட்டு தானம் செய்த நிகழ்வை திருவரங்கத்தில் செய்த ஒரே மன்னன் இவரே எனக் கூறப்படுகிறது. இதனால் அவர் அளித்த தானத்தின் அளவு எவ்வளவு பிரம்மாண்டமானது என்பதும் புரிகிறது. இவர் "கோயில் பொன்வேய்ந்த பெருமாள்" என்ற பட்டத்தைப் பெற்றார். திருவரங்கம் மற்றும் சிதம்பரம் கோயில்களின் விமானங்களுக்கு பொன் வேய்ந்தார்.

மேலும் பல சன்னதிகள், மண்டபங்கள், கோபுரங்கள் ஆகியவற்றை அமைத்து கோயில் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்தார். மேலும், பெருவுடையார் கோவில் (தஞ்சை பெரிய கோவில்) அம்மன் சன்னதியை கட்டிய பெருமையும் இவருக்கே சொந்தம் என மரபுச் செய்திகள் கூறுகின்றன. அந்த அம்மன் சன்னதிக்குள் இவருடைய உருவச்சிலையும் காணப்படுவது, இவர் செய்த திருப்பணிகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

தனது குடும்பத்தினரின் நினைவுகளைப் போற்றியவர் இவர். அண்ணன் குலசேகர பாண்டியனுக்காக மண்டபங்கள் அமைத்தார்; விக்கிரம பாண்டியனின் நினைவாக சிதம்பரத்தில் சதுர்வேதி மங்கலம் அமைத்தார். ஆரகலூர், திருப்புட்குழி போன்ற இடங்களில் கோயில்களை நிறுவி மரபை நிலைநிறுத்தினார். இவரது ஆட்சியில் கட்டிடக் கலை பெரிதும் வளர்ச்சி பெற்றது. திருக்கோளிலி சிவன் கோயில், திருவைகுண்டம் கோபுரம் போன்றவை இவரது கால கட்டிடங்களாகக் கருதப்படுகின்றன. மேலும் "சேரனை வென்றான் திருநாள்" போன்ற விழாக்களை ஏற்படுத்தி தனது வெற்றிகளை மக்களிடையே நிலைநிறுத்தினார். இவ்வளவு சாதனைகளின் காரணமாக இவர் "எம்மண்டலமும் கொண்டருளியவன்", "பொன்வேய்ந்த மகிபதி", "எல்லாந் தலையானான்" போன்ற பல விருதுப் பட்டங்களைப் பெற்றார். உண்மையில், இவர் ஒரு அரசர் மட்டுமல்ல — பாண்டிய பேரரசின் மறுவிழிப்பை உருவாக்கிய வரலாற்றுச் சக்தி. சித்திரை மாதம் மூலம் நட்சத்திரத்தில் பிறந்த இம்மாமன்னனின் பிறந்த நாள் மே 5 ஆம் தேதி "பாண்டியர்கள் தேடி பயணம் வரலாற்று ஆய்வு குழு" சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

இது வெறும் நினைவு நாள் அல்ல; பாண்டியர் பெருமையை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஒரு வரலாற்றுப் பொது விழாவாகும். முடிவாக, முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் — யுத்தத்தில் தோல்வி அறியாத வீரன், தர்மத்தில் எல்லை இல்லாத தானவீரன், கலாச்சாரத்தில் ஒளி பரப்பிய அரசன். இவரது ஆட்சி தமிழர் வரலாற்றின் பொற்காலத்தை நிரூபிக்கும் நிலையான சின்னமாகும்

## திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு

**PREMIUM PLOT SALE**
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site

VGP THIRU NAGAR, PHASE-1
- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft

LIMITED PLOTS AVAILABLE!

Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner

---

## டீலர்கள் தேவை
## மைலேஜ் பூஸ்டர்
**20% ~ 30%**

மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

---

## நிலம் தேவை
### தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
**1 to 2 ஏக்கர்**
தொடர்புக்கு: Ph. 6384617773

---

## SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
### மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

---

## Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)

UG & PG COURSES

ADMISSIONS OPEN

Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388

---

## WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
- HOUSEKEEPING STAFF (Male & Female)
- MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
- ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
- ELECTRICAL SUB-CONTRACTOR
- DRIVER

GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

---

## சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
**2 ஏக்கர் விற்பனை**
1 ஏக்கர் 25cr

## வண்டலூர் கேளம்பாக்கம் ரோடு
**17 ஏக்கர் விற்பனை**
1 acre 16 cr
Ph. 9566055082

---

## EMI 50%
50% OFFER
### PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை

SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.

CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

---

முருகன் துணை
## A.S.R ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்

சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711

---

GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும் சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI

OFFER PRICE ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT

FREE FREE!!! 10 கிராம் GOLD COIN சேமியுங்கள்

VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

---

## PLOTS FOR SALE
## SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
**கிண்டி**
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available | BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259

---

## ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver

Complete Solution for ePaper Publishing
- Daily ePaper
- Archive Management
- Subscription & Free Access
- Google Ads Integration
- Upload PDF & Publish
- Mark, Crop, Cut & Share
- Share on Social Media

COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE FOR JUST ₹2999/- PER YEAR

HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included

CALL / WHATSAPP: 9040463899

---

## JUST Xth PASS
## JOB OPPORTUNITY
**₹25,000/- PER MONTH ***
All Taluks & Districts in ALL STATES in INDIA
- FRESHERS CAN APPLY
- ATTRACTIVE SALARY
- GROWTH OPPORTUNITIES
- SECURE YOUR FUTURE

APPLY NOW!
Call / WhatsApp: 8122664699
*Terms & Conditions Apply

---

## WANTED
**READYMADE SHOWROOM:**
- Sales Man / Sales Girl

**RESTAURANT :**
- Bryani Master
- Chinese Master
- Atho Master
- Chef
- Helper

**OTHER POSITIONS:**
- Accounts
- Billing
- Internet Engineer

PLACE: T NAGAR, NAVALUR
CALL / WHAT'SAPP: 7550123560, 6369528629

---

## நிலம் தேவை
### தெற்கு சென்னை
சென்னை – திருப்போரூர் – செங்கல்பட்டு
1 - 2 ஏக்கர்
திருப்போரூர்-செங்கல்பட்டு ரோடு உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

---

## ₹ 15000 - 21000 | Monthly
Full Time Job Apply, Fresh or Experienced,
100% Job Available Here. No registration fee, Direct Job,
Chennai, Tamilnadu,
- 12th to Graduate and Diploma/ITI Qualified and Other Degree Holders.
- Back Office,
- Data Entry,
- Tele Caller's,
- Field officer,
- Team management, Male/Female Both Can Apply,

Share Your Resume with Photo to
77899 41009

---

## ADVERTISE WITH US
7789941009

---

## PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில் வீட்டு மனைகள் விற்பனைக்கு
**BANK LOAN AVAILABLE**
Contact: 9841495210

---

## WANTED
- LAB HELPER
- OFFICE BOY
- GARDENER

CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

---

## WANTED
Work From Home Opportunity
Telecallers Required | Also Hiring for IT Jobs
- Salary: ₹10,000 - ₹15,000
- Attractive Incentives
- Flexible Work From Home Option

Freshers & Experienced Both Can Apply
Contact Now: 9566072935

---

உங்கள் ஒளிமயமான எதிர்காலத்திற்கு
உங்கள் ஜோதிடர் 9940374962
## D.சக்திவேல்
அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்

---

## WANTED
## OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

---

திருமுடிவாக்கம் அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு
## ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி 10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம் : 18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு : 9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com

---

## WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

---

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

---

## MATRIMONY WEBSITE/SOFTWARE
VIVAH | SHAADI | PELLI | KALYANAM
Find Your Perfect Life Partner
Trusted by Thousands, Chosen for a Lifetime

COMPLETE MATRIMONY WEBSITE FOR JUST ₹2999/- PER YEAR

HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included

GET YOUR PROFESSIONAL MATRIMONY WEBSITE TODAY!
BEST PRICE BEST SOLUTION
CALL US 9040463899 | WEBSITE www.matrimonyweb.in

# கவிதை அரங்கம்!





விழியோரம் விழுந்த சிறு
துளி மின்னல் நீ!

மொழியோடு மோதும்
முதல் கவிதை நீ!

பேசாத மௌனத்தில்
அர்த்தம் தந்தாய்,

நகராத கடிகார
முள்ளையும் நகர
வைத்தாய்.

உன் புன்னகை பூக்கும்
ஒரு நொடியில்,

என் கவலைகள் யாவும்
கரைந்து போகுமே!

காற்றோடு பேசும் உன்
குழல் அசைவில்,

நூறு கவிதை நான்
எழுதுவேனே!

# வாழ்க்கை தத்துவம்...



முகஸ்துதி செய்யும் நண்பனை விட, முகம் பார்த்து குறை சொல்லும் எதிரி மேல்.

கடமையைச் செய், பலனை எதிர்பார்க்காதே.

எளிமையாக வாழ்வதுதான் மேன்மையான வாழ்க்கை.

பயம் உன்னைக் கொல்லும்; துணிச்சல் உன்னைக் காக்கும்.

புத்தகங்கள் சிறந்த வழிகாட்டிகள்.

ஒருமுறை சொன்ன சொல் திரும்பாது; சிந்தித்துப் பேசு.

சிரிப்பு மனதிற்கு ஒரு மருந்து.

# "நாடகக் காதல்"



“ஹும்... ஒரு பாய்ஃபிரண்ட் இருந்தால்தான் வீட்டில் தப்பிக்க முடியும் போலிருக்கே...”தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள் நித்யா.

அவள் வீட்டில் திருமணப் பேச்சு ஆரம்பித்த நாளிலிருந்து தினமும் புயல்தான்.

நித்யா, "மாட்டேன்” என்று சொல்லும் ஒவ்வொரு முறையும் அவள் அம்மாவின் கண்களில் கண்ணீர். அப்பாவின் குரலில் கோபம்.

வேறு வழியில்லாமல், " நான் ஒருவரைக் காதலிக்கிறேன்" என்று பொய் சொல்லி வைத்தாள்.

அந்த நேரத்தில்தான் வசந்த் அவளுடைய வாழ்க்கையில் வந்தான். நடிப்பில் அதீத ஆசை. பல ஆடிஷன்களில் தோற்றுக் கொண்டே இருப்பவன்.

“ஒரு மாதம் மட்டும்... என் பாய்ஃபிரண்ட் மாதிரி நடிக்கணும்... பணம் தருகிறேன்...” என்றாள் நித்யா.

"’நடிப்புத்தானே... ஓ.கே."

முதல் நாள் வீட்டிற்கு வந்தான்.

“இவர்தான் வசந்த்... என் காதலன்” என நித்யா அறிமுகப்படுத்தினாள்.

அப்பா அவனிடம் ஆயிரம் கேள்விகள் கேட்டார். வசந்த்... கொஞ்சமும் தடுமாறவில்லை.

அவன் பேசும் விதம்... அதிலிருந்த மரியாதை... கண்களில் தெரிந்த நேர்மை... அந்த வீட்டில் ஒரு நம்பிக்கையை விதைத்தது.

நாட்கள் நகர்ந்தன. நாடகமாக ஆரம்பித்த பேச்சுக்கள், நிஜமான சிரிப்புகளாய் மாறின.

“நீ ரொம்ப நல்லா நடிக்கிறே...” என்றாள் நித்யா. வசந்த் சிரித்தான்.

ஒரு மாலை... மழை தூறிக் கொண்டிருந்தது. நித்யா திடீரென கேட்டாள், "ஒரு மாதம் முடிந்ததும்... நீ போயிடுவியா?”

"நான் வந்ததே... போகத்தான்...” என்றான் வசந்த்.

அந்த பதில் நித்யாவின் உள்ளத்தில் எதையோ உடைத்தது. அவள் இதயம் அதை ஏற்கவில்லை.

“நாடகம் முடிஞ்சிடுச்சா?...” கேட்டாள்.

“ஆமாம்...”

“ஆனா... எனக்கு இன்னும் முடிஞ்ச மாதிரி தெரியல...” அவள் குரல் நடுங்கியது.

வசந்த் அவளை நேராக பார்த்து "எனக்கும் அப்படித்தான் தோணுது...” என்றான் மெதுவாக.

அந்த நிமிடத்தில்...நாடகம் முழுவதும் கலைந்து போனது.

“அப்படின்னா...?” தலையைச் சாய்த்துக் கொண்டு கேட்டாள் நித்யா. வசந்த் சிரித்தான். "இப்போ... நான் நடிக்கலை... உண்மையாகவே காதலிக்கிறேன்...”

அவர்களின் உண்மைக்காதல் அன்றுதான் தொடங்கியது.

(முற்றும்)

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



கேள்வி: ஒருத்தன் 10 மாடி பில்டிங் மேல இருந்து குதிச்சான். ஆனா அவனுக்கு எதுவுமே ஆகல. எப்படி?

பதில்: ஏன்னா, அவன் ’பாதுகாப்பான’ பில்டிங் மேல இருந்து குதிச்சான்!



# தினம் ஒரு சமையல்



## வெள்ளைப்பணியாரம்

**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி: 1 ஆழாக்கு (200 கிராம்)
உளுந்து: 2 டேபிள் ஸ்பூன் (தலை தட்டி)
உப்பு: தேவையான அளவு
பால்: 1 டேபிள் ஸ்பூன் (பணியாரம் வெள்ளையாக வர)
எண்ணெய்: பொரிப்பதற்கு தேவையான அளவு

**செய்முறை:**

ஊறவைத்தல்: பச்சரிசி மற்றும் உளுந்தை ஒன்றாகக் கலந்து நன்றாகக் கழுவி, சுமார் 2 மணி நேரம் ஊற வைக்கவும்.
அரைத்தல்: ஊறவைத்த அரிசி, உளுந்தை மிக்ஸியில் அல்லது கிரைண்டரில் போட்டு, ஐஸ் வாட்டர் அல்லது குளிர்ந்த நீர் தெளித்து மிக நைஸாக அரைக்கவும்.
மாவு தோசை மாவு பதத்தை விட சற்று நீர்க்க (ரவை தோசை மாவு பதத்திற்கு சற்று முன்னதாக) இருக்க வேண்டும்.



கலக்குதல்: அரைத்த மாவுடன் தேவையான அளவு உப்பு மற்றும் ஒரு ஸ்பூன் பால் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும். (இந்த மாவை புளிக்க வைக்கத் தேவையில்லை, அரைத்த உடனே செய்யலாம்).
பொரித்தல்: வாணலியில் எண்ணெய் ஊற்றி சூடாக்கவும். எண்ணெய் மிதமான சூட்டில் இருப்பது அவசியம்.
ஊற்றுதல்: ஒரு குழிவான கரண்டியில் மாவை எடுத்து, எண்ணெயிற்கு நடுவில் மெதுவாக ஊற்றவும்.
வேகவைத்தல்: மாவு ஊற்றியதும் பூரி போல எழும்பி வரும். அந்த சமயத்தில் கரண்டியால் பணியாரத்தின் மீது எண்ணெயை மெதுவாகத் தெளிக்கவும்.
திருப்புதல்: பணியாரம் சிவந்து விடக்கூடாது. வெள்ளையாக இருக்கும் போதே திருப்பிப் போட்டு சில நொடிகள் கழித்து எடுத்துவிடவும்.

# ஈச்சுரமூலி பயன்கள்



ஈச்சுரமூலி (ARISTOLOCHIA INDICA), ஆடுதீண்டாப்பாளை என்றும் அழைப்பார்கள், சித்த மருத்துவத்தில் மிக முக்கியமான ஒரு மூலிகையாகும். இதன் இலைகள், வேர் மற்றும் தண்டு என அனைத்துப் பாகங்களும் மருத்துவக் குணங்கள் கொண்டவை.

இதன் முக்கிய பயன்கள் இதோ:

1. நச்சு முறிப்பான் (ANTIDOTE FOR TOXINS)
ஈச்சுரமூலியின் மிக முக்கியமான பயன் நச்சுக்களை முறிப்பதே.
தேள் கடி, பூரான் கடி மற்றும் விஷப் பூச்சிகளின் கடிக்கு இதன் இலைச் சாறு ஒரு சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது.
பாம்பு கடித்தவர்களுக்கு முதலுதவியாக இதன் வேர் அல்லது இலைச் சாறு வழங்கப்பட்ட வரலாறு உண்டு (இருப்பினும் மருத்துவமனைக்குச் செல்வது மிக அவசியம்).
2. சுவாசப் பிரச்சனைகள் (RESPIRATORY ISSUES)
தொடர் இருமல், ஆஸ்துமா மற்றும் சளித் தொல்லைகளுக்கு ஈச்சுரமூலி சிறந்த நிவாரணம் அளிக்கிறது.
மார்புச் சளியை வெளியேற்றும் குணம் இதற்கு உண்டு.
3. வயிற்றுப் புழுக்கள் நீக்கம் (DEWORMING)
குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் வயிற்றில் இருக்கும் தேவையற்ற புழுக்களை வெளியேற்ற இதன் இலைச் சாறு சிறிதளவு கொடுக்கப்படுகிறது. இது ஒரு சிறந்த ’கிருமி நாசினி’.
4. தோல் வியாதிகள் (SKIN DISEASES)
தோலில் ஏற்படும் படை, சொறி, சிரங்கு மற்றும் ஆறாத புண்களுக்கு இதன் இலைகளை அரைத்துப் பூசினால் விரைவில் குணமாகும்.

# ‘பேட்ரியாட்’ வெற்றியைக் கொண்டாடிய மம்மூட்டி - மோகன்லால்.. லீக்கான போட்டோஸ்




மலையாள சினிமாவின் முன்னணி நட்சத்திரங்கள் ஒன்றாக இணைந்துள்ள ‘பேட்ரியாட்’ திரைப்படம் மே 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது. மகேஷ் நாராயணன் இயக்கத்தில் உருவான இந்த படம், தனது வலுவான கதைக்களம் மற்றும் நட்சத்திர அணியால் பெரிய கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்த திரைப்படத்தில் மோகன்லால், மம்மூட்டி, நயன்தாரா, பகத் ஃபாசில், குஞ்சக்கோ போபன் மற்றும் ரேவதி உள்ளிட்ட பல முன்னணி நடிகர்கள் இணைந்து நடித்துள்ளனர். இப்படத்தின் கூட்டணி ரசிகர்களுக்கு ஒரு பெரிய விசேஷமாக அமைந்துள்ளது.

இந்நிலையில், இந்த படத்தின் வெற்றியை தொடர்ந்து மம்மூட்டி தனது சமூக வலைதளத்தில் மோகன்லால் உடன் எடுத்துக்கொண்ட ஒரு அழகான புகைப்படத்தை பகிர்ந்துள்ளார். அதனுடன், இப்படத்திற்கு கிடைத்த வரவேற்புக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்டுள்ளார்.

இந்த பதிவு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், இரு சூப்பர் ஸ்டார்களையும் ஒன்றாக காணும் மகிழ்ச்சியை ரசிகர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். மொத்தத்தில், ‘பேட்ரியாட்’ திரைப்படம் ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ததுடன், மலையாள சினிமாவில் ஒரு முக்கியமான வெற்றிப் படமாக மாறியுள்ளது.

**சினிமா**



அயலி சீரியல் நடிகை வித்யா வின் அழகிய புகைப்படங்கள்

# சிம்பு, விஜய் சேதுபதி படங்கள் திடீரென ரத்து.! - ஷாக்கில் ரசிகர்கள்.. நடந்தது என்ன?

(மே 2) தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம் அறிவித்த அடையாள வேலைநிறுத்தம் காரணமாக, சென்னை முழுவதும் நடைபெற இருந்த பல முக்கிய திரைப்படங்களின் படப்பிடிப்புகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை எந்தவித படப்பிடிப்பு பணிகளும் நடைபெறக்கூடாது என்ற அறிவிப்பின் பேரில், பல படக்குழுக்கள் தங்களது பணிகளை நிறுத்தியுள்ளன.

இதன் காரணமாக, வெற்றிமாறன் - சிம்பு கூட்டணியில் உருவாகி வரும் ‘அரசன்’ திரைப்படத்தின் படப்பிடிப்பு பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் விஜய் சேதுபதி நடிக்கும் ‘பாக்கெட் நாவல்’ படத்தின் பணிகளும் இன்று நடைபெறவில்லை. மேலும் ஜெயம் ரவி மற்றும் யோகி பாபு இணைந்து நடிக்கும் புதிய படத்தின் ஷூட்டிங்கும் இந்த வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.



இந்த அடையாள வேலைநிறுத்தம் தயாரிப்பாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தும் வகையில் நடத்தப்பட்டுள்ளதால், திரைத்துறையில் இன்று முழுவதும் அமைதியான சூழல் நிலவியது. படப்பிடிப்பு தளங்கள் வெறிச்சோடியிருந்தன.


இந்நிலையில், தயாரிப்பாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பின்படி, இன்று மாலை 6 மணிக்குப் பிறகு படப்பிடிப்புகள் மீண்டும் வழக்கம்போல் தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட பணிகள் மீண்டும் வேகமெடுக்க உள்ளன.

























WANTED

ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN

EGMORE, MOUNT ROAD

CALL US 7550093245 / 7358696451



## மாநிலங்களவைக்கு கூடுதல் அதிகாரம் தேவை: டிஆர்எஸ் தலைவர் கவிதா வலியுறுத்தல்



**புதுடெல்லி, மே 4:**

டிஆர்எஸ் கட்சி சார்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது தொகுதி மறுசீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்து அவர் பேசியதாவது: ஒரு குறிப்பிட்ட மக்கள்தொகை எண்ணிக்கையைநிர்ணயித்து அதன் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையைமத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இதனால் சில மாநிலங்களின் மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கை குறைந்தாலும் அதுகுறித்து கவலை கொள்ளத் தேவையில்லை. மாறாக அதை ஈடுகட்டும் வகையில் அமெரிக்காவின் செனட் சபையைப்போல் அனைத்துமாநிலங்களுக்கும் ஒரே அளவிலான எண்ணிக்கையில் மாநிலங்களவை இடங்களைஒதுக்கவேண்டும்.

நிதி மசோதா உள்ளிட்ட பல்வேறு மசோதாக்களை அங்கீகரிப்பதில் மாநிலங்களவைக்கு செனட் சபையைப் போலவே கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். மாநிலங்கள் மசோதாக்களை ஏற்காவிட்டால் அவை உடனடியாக நிறுத்தி வைக்கப்பட வேண்டும். இதன் மூலம் மாநிலங்களின் அரசியல் மற்றும் நிதிப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும். இந்த நடைமுறை அமல்படுத்தப்பட்டால் நமது அரசமைப்புச் சட்டத்தின் ஒன்றிய மற்றும் கூட்டாட்சி தத்துவம்நிலைநிறுத்தப்படும். இதுதொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு விரிவான அறிக்கையை விரைவில் அனுப்பவுள்ளேன் என்றார்.

## உலகளாவிய சவால்களை வாய்ப்புகளாக மாற்ற வேண்டும்: ஜெ.பி.நட்டா




**புதுடெல்லி, மே 4:**

உலகளாவிய பதற்றமான சூழலால் ஏற்பட்டுள்ள சவால்களை தங்களுக்குச் சாதகமான வாய்ப்புகளாக மாற்றி 2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய தீவிரமாகப் பணியாற்ற வேண்டும் என மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா சனிக்கிழமை தெரிவித்தார்.

தெற்கு குஜராத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கான இரு நாள் முதலீட்டாளர்கள் மாநாட்டின் நிறைவு விழாவில் பங்கேற்று ஜெ.பி.நட்டா மேலும் பேசியதாவது: பொருளாதார வலிமை என்பது வளர்ச்சியை சார்ந்தது மட்டுமல்ல; அது தற்சார்பு மற்றும் மீள்திறனையும் உள்ளடக்கியது.

21-ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் இடையே பெரும் இடைவெளி இருந்தது. அப்போது வணிகத்துக்கு இடையூறுகள் ஏற்படுத்துவது குறித்தே அரசியல்வாதிகளும் அரசு அதிகாரிகளும் எண்ணி வந்தனர். இந்தச் சூழலில் 2003-ஆம் ஆண்டில் குஜராத் முதலீட்டாளர்கள் மாநாட்டை அப்போதைய முதல்வர் நரேந்திர மோடி நடத்தினார். அதன் பிறகு வணிகத்துக்கான தடைகள் அகற்றப்பட்டன. வணிகம் மாநிலத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்றும் வகையில் மறுகட்டமைப்பு செய்யப்பட்டது. இதை முன்மாதிரியாகக் கொண்டு உத்தர பிரதேசம், பிகார் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களும் பின்பற்றின.

தற்போது சர்வதேச புவி அரசியலில் ஏற்பட்டுள்ள சிக்கல்களால் உலக அளவில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இதை நமக்கு சாதகமான வாய்ப்பாக மாற்ற வேண்டும். 2047-ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை அடைய நாம் தீவிரமாகப் பணியாற்ற வேண்டும் என்றார்.

## ராகுலுக்கு எதிரான அவதூறு வழக்கு: மே 13-க்கு உ.பி. நீதிமன்றம் ஒத்திவைப்பு

**பாட்னா, மே 4:**

உத்தர பிரதேசத்தில் புல் கரி வழக்கு தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்த கருத்துகளுக்கு எதிரான அவதூறு வழக்கு விசாரணையை மே 13-க்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

உத்தர பிரதேசத்தின் ஹாத்ரஸ் மாவட்டத்தில் உள்ள புல் கரி கிராமத்துக்கு கடந்த 2024-ஆம் ஆண்டு சென்ற ராகுல் காந்தி, அங்கு பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ரவி, ராம்குமார், லவகுஷ் ஆகிய மூவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டு சுதந்திரமாக நடமாடி வருவதாகவும், பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர் வீட்டில் அடைந்து கிடைப்பதாகவும் பேசியதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் நிரபராதி என்று அறிவித்து வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட தங்களை அவதூறாகப் பேசியதாக, ஹாத்ரஸில் எம்.பி., எம்எல்ஏக்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றத்தில், ராகுலுக்கு எதிராக ரவி உள்ளிட்ட மூவர் புகார் மனு அளித்தனர். இந்த மனு மீதான விசாரணையின்போது ராகுலுக்கு சம்மன் அளிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து வாதங்கள் நடைபெற்ற நிலையில், அடுத்த விசாரணையை மே 13-க்கு நீதிமன்றம் ஒத்திவைத்ததாக புகார்தாரர்களின் வழக்குரைஞர் முன்னா சிங் புண்டிர் சனிக்கிழமை தெரிவித்தார்.

## ஏழு வயதில் இரட்டை உலக சாதனை!




**புதுடெல்லி, மே 4:**

இந்தியா-இலங்கை இடையிலான பாக் நீரிணையை நீந்திக் கடந்து உலக சாதனை படைத்த ஏழு வயதுச் சிறுவன் இஷாங்க் சிங்.

ஜார்க்கண்டைச் சேர்ந்த இஷாங்க், அண்மையில் இலங்கையின் தலைமன்னாரில் நீந்தத் தொடங்கி தமிழகத்தின் தனுஷ்கோடியை வந்தடைந்தார். சுமார் 29 கி.மீ. தொலைவுள்ள இந்த பாக் நீரிணைப் பகுதியை 9 மணி நேரம் 50 நிமிஷங்களில் இஷாங்க் நீந்திக் கடந்தார். பாக் நீரிணையை மிகக் குறைவான வயதில் மிக வேகமாக கடந்து இரட்டை உலக சாதனையைப் படைத்துள்ளார் இச்சிறுவன்.

## கடும் வெயிலால் 12 மாநிலங்களில் பரவும் காட்டுத் தீ: 634 இடங்கள் பற்றி எரிகின்றன



**புதுடெல்லி, மே 4:**

கடும் வெயில் காரணமாக 12 மாநிலங்களில் 10 வனப் பகுதிகளில் காட்டுத் தீ வேகமாகப் பரவி வருகிறது. மத்திய பிரதேச வனப்பகுதிகளில் மட்டும் 634 இடங்களில் காட்டுத் தீ கொழுந்துவிட்டு எரிகிறது.


கோடைக் காலம் என்பதால், நாட்டின் பல பகுதிகளில் கடும் வெயில் காரணமாக வெப்ப அலை வீசுகிறது. இதன் காரணமாக 12 மாநிலங்களில் 10 வனப் பகுதிகளில் காட்டுத் தீ கடந்த 3 நாட்களுக்கு மேலாக பற்றி எரிவது செயற்கைக்கோள் படங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. மத்திய பிரதேச வனப் பகுதியில் 634 இடங்களில் காட்டு தீ பற்றியுள்ளன.

வடக்கில் உத்தராகண்ட், மேற்கில் குஜராத் முதல் தெற்கே ஆந்திரா வரை 12-க்கும் மேற்பட்ட மாநிலங்களில் பெரிய அளவிலான காட்டுத் தீ பரவியுள்ளது. இதன் காரணமாக பல உயிரினங்கள் இறந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

மகாராஷ்டிரா மற்றும் சத்தீஸ்கர் மாநிலத்தில் தலா 465 இடங்களிலும், ஆந்திராவில் 400-க்கும் மேற்பட்ட இடங்களிலும், அசாம் மாநிலத்தில் 190 இடங்களிலும், மணிப்பூரில் 128 இடங்களிலும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.

உத்தராகண்ட்டில் மட்டும் 130 ஹெக்டேர் வனப் பகுதி காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டுள்ளது. சார்தாம் யாத்திரை நடைபெறும் பகுதிகளிலும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. தீயை அணைக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கர்நாடகத்தில் பறவைக் காய்ச்சல்: 44 மயில்கள் உயிரிழப்பு



**பெங்களூரு, மே 4:**

கர்நாடக மாநிலம், தும்கூரு மாவட்டத்தில் 44 மயில்கள் திடீரென இறந்தன. இதற்கான காரணம் தெரியாத நிலையில், இறந்த மயில்களின் உடல்கள் போபாலில் உள்ள தேசிய உயர்பாதுகாப்பு விலங்கு நோய்கள் மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அது தொடர்பான ஆய்வறிக்கையில், 44 மயில்களும் எச்5என்1 எனப்படும் பறவைக் காய்ச்சலால் இறந்துவிட்டதாக வனத்துறை அமைச்சர் ஈஸ்வர் கண்ட்ரே தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரில் செய்தியாளர்களிடம் அவர் சனிக்கிழமை மேலும் கூறியது:

தும்கூரு மாவட்டத்தின் குலுர் ஒன்றியத்தைச் சேர்ந்த ஹுல்லேனஹள்ளி, பைரசந்திரா கிராமங்கள், உர்டிகெரே ஒன்றியத்தைச் சேர்ந்த பொம்மனஹள்ளி மற்றும் ஹோலிஹள்ளி கிராமங்களில் ஏப். 16 முதல் 21ஆம் தேதிவரையிலான காலகட்டத்தில் 44 மயில்கள் இறந்தன. இவற்றின் உடல்களை சோதனை செய்தபோது, பறவைக் காய்ச்சலுக்கு இறந்தது உறுதியாகியுள்ளது.

இதை தொடர்ந்து, உயிரியல் பூங்காக்கள், சாலைகள், சரணாலயங்கள், மாகடி ஏரி, கொக்கரே பெல்லூர் சமுதாய பறவைகள் சரணாலயம் உள்ளிட்ட வனப் பகுதிகளில் பறவைக் காய்ச்சல் பரவாமல் தடுக்க மத்திய அரசு வழிகாட்டுதலின்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்ளூர் அல்லது வெளியூர் பறவைகள் இறந்தால், அவற்றின் உடல்களைச் சேகரித்து, உடனடியாக சோதனைக்கு அனுப்ப வேண்டும் என்று வனத்துறை உயரதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார்.

## ஜபல்பூர் படகு விபத்து வீடியோவில் அதிர்ச்சி தகவல்: லைப் ஜாக்கெட் அணியாததே உயிரிழப்புக்கு காரணம்

**போபால், மே 4:**


மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூர் மாவட்டத்திலுள்ள பார்கி அணையில் 3 நாட்களுக்கு முன்பு படகில் சுற்றுலா சென்றபோது பலத்த காற்று வீசியதில் படகு கவிழ்ந்தது. இதில், தமிழகத்தைச் சேர்ந்த 5 பேர் உட்பட சுற்றுலாப் பயணிகள் 9 பேர் உயிரிழந்தனர். 28 பேர் மீட்கப்பட்டனர்.

இது தொடர்பாக புதிய வீடியோ ஒன்று வெளியாகியுள்ளது. இதன் மூலம், படகுப் பயணங்களின்போது செய்ய வேண்டிய அடிப்படை விதிகளைக் கூட அந்தப் படகை இயக்கிய ஊழியர்கள் பின்பற்றவில்லை என்று தெரிய வந்துள்ளது. இந்த விபத்தில் தனது குழந்தையை மார்போடு இறுக அணைத்தபடி தாய் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார். இந்தக் காட்சி கல்நெஞ்சங்களையும் உருக்குவதாக அமைந்துள்ளது.

மேலும், அந்த வீடியோவில் சீல் கூட பிரிக்கப்படாத உயிர் காக்கும் லைப் ஜாக்கெட்டுகள் இருப்பது தெரிய வந்துள்ளது. உயிரைக் காக்க உதவும் லைப் -ஜாக்கெட்டுகளைப் பயணிகளுக்கு படகு ஊழியர்கள் வழங்கவில்லை.

வீடியோவில் சுற்றுலாப் பயணிகள் உயிர் பயத்தில் கூச்சலிடுவதும், தப்பிக்க முயல்வதும் தெரிகிறது. படகில் தண்ணீர் புகுந்த பிறகு அவசர அவசரமாக கட்டி வைத்திருந்த லைப் ஜாக்கெட்டுகளை அவிழ்த்து பயணிகளுக்கு வழங்குவது பதிவாகி உள்ளது. பயணிகள் பலர் லைப் ஜாக்கெட்டுகள் அணியாமல் அலறுவதும் தெரிகிறது.

## அரசின் முன் அனுமதியில்லாமல் காப்பீட்டுத் துறையில் 100% எஃப்டிஐ: மத்திய அரசு அறிவிக்கை




**புதுடெல்லி, மே 4:**

மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் காப்பீட்டுத் துறையில் 100 சதவீதம் அந்நிய நேரடி முதலீட்டை (எஃப்டிஐ) முதலீட்டாளர்கள் மேற்கொள்வதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை மத்திய நிதியமைச்சகம் சனிக்கிழமை வெளியிட்டது.

அதேவேளையில் அந்நிய செலாவணி மேலாண்மை (இரண்டாவது திருத்தம்) விதிமுறைகள் 2026-இன்படி, மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல் காப்பீட்டு நிறுவனங்களில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதிக்கப்பட்டாலும், ஆயுள் காப்பீட்டு கழகத்தில் (எல்ஐசி) அந்நிய நேரடி முதலீட்டை 20 சதவீதம் வரை மட்டுமே மேற்கொள்ள முடியும்.

முன்பு மத்திய அரசு அல்லது ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இல்லாமல், காப்பீட்டுத் துறையில் 74 சதவீதம் வரை அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், கடந்த ஆண்டு டிசம்பரில் சப்கா பீமா சப்கி ரக்ஷா (காப்பீட்டு சட்டங்கள் திருத்தம்) மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியது. இதையடுத்து அந்த முதலீட்டு வரம்பு 100 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. இந்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, மசோதா சட்டமானது.

## இந்தியாவில் 'ஒயிட் காலர்' வேலைவாய்ப்புகள் 6% அதிகரிப்பு!



**புதுடெல்லி, மே 4:**

இந்தியாவில் அலுவலகப் பணி சார்ந்த 'ஒயிட் காலர்' வேலைவாய்ப்பு, கடந்த ஏப்ரல் மாதத்தில் 6 சதவீத வருடாந்திர வளர்ச்சியை எட்டியுள்ளது.

காப்பீடு, தகவல் தொழில்நுட்பம் (ஐ.டி.) சார்ந்த 'பிபிஓ' துறைகளில் அதிகப்படியான பணியமர்த்தல் நடைபெற்றுள்ளதாக 'நாக்குரி ஜாப்ஸ்பீக்' வெளியிட்டுள்ள மாதாந்திர ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு வளர்ச்சியில் காப்பீட்டுத் துறை 21 சதவீத வளர்ச்சியுடன் முதலிடத்தில் உள்ளது. இதையடுத்து, பிபிஓ மற்றும் ஐடி சார் சேவைகள் துறையில் 15 சதவீத வளர்ச்சியும், ரியல் எஸ்டேட் துறையில் 12 சதவீத வளர்ச்சியும், சுகாதாரத் துறையில் 11 சதவீத வளர்ச்சியும், கல்வித் துறையில் 9 சதவீத வளர்ச்சியும் பதிவாகியுள்ளது.

அதேநேரம், கடந்த 4 மாதங்களாக சரிவைச் சந்தித்து வரும் தொலைத்தொடர்புத் துறை (11 சதவீதம்), வங்கித் துறை (10 சதவீதம்) ஆகியவை ஏப்ரல் மாதத்திலும் பின்னடைவைச் சந்தித்துள்ளன. ஐடி, பார்மா, ஆட்டோமொபைல் துறைகளில் பெரிய மாற்றமின்றி நிலைத்தன்மை காணப்படுகிறது.

தென் மாநிலங்களின் ஆதிக்கம்: வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் தென்னிந்திய நகரங்கள் தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றன. ஹைதராபாத் 12 சதவீதம், பெங்களூரு 7 சதவீதம், சென்னை 6 சதவீதம் வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

தலைநகர் தில்லி (3 சதவீதம்) மற்றும் கொல்கத்தாவில் (1 சதவீதம்) குறைந்த வளர்ச்சியே பதிவான நிலையில், நாட்டின் நிதித் தலைநகரான மும்பையில் வேலைவாய்ப்பு 3 சதவீதம் சரிவைச் சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

2-ஆம் நிலை நகரங்களில் முன்னேற்றம்: பெருநகரங்களைத் தாண்டி, 2-ஆம் நிலை நகரங்களிலும் வேலைவாய்ப்புச் சந்தை விரிவடைந்து வருகிறது. ராஜஸ்தானின் ஜெய்பூர் (12 சதவீதம்), கோவை (11 சதவீதம்), குஜராத்தின் அகமதாபாத் (7 சதவீதம்) ஆகிய நகரங்களில் பணியமர்த்தல் நடவடிக்கைகள் உற்சாகமாக உள்ளன.

## 98.47 சதவீத ரூ.2,000 நோட்டுகள் திரும்பிவிட்டன: ரிசர்வ் வங்கி




**புதுடெல்லி, மே 4:**

புழக்கத்தில் இருந்த ரூ.2,000 நோட்டுகளில் 98.47 சதவீதம் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி வெள்ளிக்கிழமை தெரிவிதுள்ளது.

2,000 ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவதாக கடந்த 2023, மே 19-ஆம் தேதி அறிவிப்பு வெளியிடப்பட்டது. அப்போது ரூ.3.56 லட்சம் கோடி மதிப்பிலான ரூ.2,000 நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. அவை திரும்பப்பெறுவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2026, ஏப்.30-ஆம் தேதி நிலவரப்படி ரூ.5,451 கோடி மதிப்பிலான ரூ.2,000 நோட்டுகள் மட்டுமே புழக்கத்தில் உள்ளன.

இதன்மூலம் 98.47 சதவீத ரூ.2,000 நோட்டுகள் பெறப்பட்டுள்ளது. இதுதொடர்பாக ரிசர்வ் வங்கி வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: 2023, மே 19-ஆம் தேதி புழக்கத்தில் இருந்த ரூ. 2000 நோட்டுகளில் 98.47 சதவீதம் தற்போது திரும்பப் பெறப்பட்டுவிட்டன என்று தெரிவித்துள்ளது.

ரிசர்வ் வங்கியின் 19 கிளை அலுவலகங்களிலும் 2,000 ரூபாய் நோட்டுகளை மாற்றிக் கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இந்த அலுவலகங்கள் மூலம் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் அவர்களது வங்கிக்கணக்கில் 2,000 ரூபாய் நோட்டுகளை சேமிப்புக் கணக்கில் செலுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர இந்தியாவில் எந்தவொரு தபால் நிலையத்தில் இருந்து இந்தியா போஸ்ட் மூலம் 2,000 ரூபாய் நோட்டுகளை அனுப்பி தங்கள் சேமிப்புக் கணிக்கில் செலுத்திக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல நூறு கோடி மதிப்பில் வங்கி மோசடியில் ஈடுபட்ட நபரை இந்தியா அழைத்து வந்தது சிபிஐ

**புதுடெல்லி, மே 4:**

ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) உட்பட பல நாடுகளில் ஏற்றுமதி தொழில் செய்து வந்தவர் கமலேஷ் பரேக். இவர் எஸ்பிஐ தலைமையிலான பல வங்கிகளில் பல நூறு கோடி கடன் பெற்று, அதை முறைகேடான வழியில் வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் மாற்றியுள்ளார். அதன்பின் அவர் யுஏஇ தப்பிச் சென்றார்.

இவர் மீது நிதி மோசடி வழக்குப் பதிவு செய்த சிபிஐ, இவரை கைது செய்ய இன்டர்போலுக்கு ரெட் நோட்டீஸ் அனுப்பியது. இதையடுத்து பரேக்கை அமீரக அதிகாரிகள் கைது செய்தனர்.

யுஏஇ உடனான குற்றவாளிகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தப்படி அவர் சிபிஐ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். நேற்று முன்தினம் டெல்லி அழைத்து வரப்பட்ட பரேக்கை, சிபிஐ அதிகாரிகள் காவலில் எடுத்து விசாரித்து வருகின்றனர்.




## திருவொற்றியூரில் மூதாட்டியிடம் ரூ.500 'டம்மி' நோட்டை கொடுத்து ஏமாற்றிய பெண் கைது

**சென்னை, மே.04:** திருவொற்றியூர் மார்க்கெட்டில் பழ வியாபாரம் செய்யும் மூதாட்டியிடம், சிறுவர்கள் விளையாடும் ரூ.500 டம்மி நோட்டைக் கொடுத்து ஏமாற்றி, பழம் வாங்கிச் சென்ற பெண்ணை போலீஸார் கைது செய்தனர்.

ஆந்திர மாநிலம், திருப்பதியைச் சேர்ந்த ஜெயலட்சுமி (66) என்ற மூதாட்டி, சென்னை, திருவொற்றியூர் மார்க்கெட் பகுதியில் பழம் வியாபாரம் செய்து வருகிறார். கடந்த 29ம் தேதி, அவரிடம் ஒரு பெண் ரூ.200க்கு மாம்பழம் வாங்கிக் கொண்டு ரூ.500 நோட்டை கொடுத்தார். அதனை உண்மை என நம்பிய மூதாட்டி, மீதம் ரூ.300-ஐ திருப்பிக் கொடுத்துள்ளார். பெண் சென்ற பிறகு நோட்டைச் சோதிந்த போது, அது சிறுவர்கள் விளையாடும் டம்மி ரூபாய் நோட்டு என்பது தெரியவந்தது.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து மூதாட்டி கண்ணீர் விட்டு அழுத வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி, பொதுமக்களிடையே பெரும் அனுதாபத்தை ஏற்படுத்தியது. இதுகுறித்து, திருவொற்றியூர் போலீஸார் தீவிர விசாரணை நடத்தி, மூதாட்டியை ஏமாற்றிய எரணாவூரைச் சேர்ந்த பாக்கிய லட்சுமி (35) என்பவரை நேற்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பாக்கியலட்சுமி போலீஸாரிடம் அளித்த வாக்கு மூலத்தில், 'தனது மகன் விளையாடிக் கொண்டிருந்த டம்மி நோட்டை எடுத்து தனது மணிபரஸில் வைத்து விட்டதாகவும், பர்ஸில் இருந்த ஒரிஜினல் ரூ.500 நோட்டுடன் இந்த டம்மி நோட்டும் கலந்திருந்ததை கவனிக்காமல், தெரியாமல் கொடுத்துவிட்டதாகவும்' அவர் கூறியுள்ளார். பாக்கியலட்சுமியின் விளக்கத்தைத் தொடர்ந்து, போலீஸார் சட்டப்படியான நடைமுறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கும்மிடிப்பூண்டி: நிலத்தை ஆக்கிரமிப்பவர் மீது நடவடிக்கை கோரி காவல் நிலையம் முன்பு தற்கொலை முயற்சி

**கும்மிடிப்பூண்டி, மே.04:** கும்மிடிப்பூண்டியை அடுத்த தேர்வழி கிராமத்தை சேர்ந்தவர் அருள் (40). இவரது பக்கத்து வீட்டில் வசித்து வருபவர் தமக்கு சொந்தமான நிலத்தை ஆக்கிரமிக்க முயற்சிப்பதாகவும், இது தொடர்பாக நிலத்தை அளவீடு செய்து தருமாறு வருவாய்த் துறையில் 2 முறை பணம் செலுத்தியும் நடவடிக்கை இல்லை என்றும், தற்போது தடுப்பு சுவர் அமைக்க செங்கற்களை இறக்கி பணிகள் தொடங்குவதால் காவல்துறையினர் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மனு அளித்துள்ளார்.

ஆனால் போலீஸார் நடவடிக்கை எடுக்காததால் அருள், கும்மிடிப்பூண்டி காவல் நிலையம் முன்பு மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயற்சித்தார். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவல்துறையினர் அவரை தடுத்து நிறுத்தி உடலில் தண்ணீரை ஊற்றினர். தொடர்ந்து சமரச பேச்சுவார்த்தை நடத்திய காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறி அங்கிருந்து அவரை அனுப்பி வைத்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## பூந்தமல்லி அருகே குட்கா கடத்தி வந்த 2 பேர் கைது

**பூந்தமல்லி, மே.04:** பூந்தமல்லி அருகே அரசால் தடை செய்யப்பட்ட குட்காவை கடத்தி வந்த 2 பேர் போலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆவடி காவல் ஆணையரகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களுக்கு எதிராக போலீஸார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக பூந்தமல்லியை அடுத்த நசரத்பேட்டை பகுதியில் குட்கா கடத்திச் செல்லப்படுவதாக நசரத்பேட்டை போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து வண்டலூர் - மீஞ்சூர் வெளிவட்ட சாலையில் நசரத்பேட்டை போலீஸார் நேற்று வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த 2 சரக்கு வாகனங்களை சோதனை செய்தனர். அந்த வாகனங்களில் தடை செய்யப்பட்ட குட்கா மூட்டை மூட்டையாக இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து வாகனங்களை ஓட்டி வந்த தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த கோபால் (35), சென்னை போரூரைச் சேர்ந்த முத்து ராஜ் (24), தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த ராமச் சந்திரன் (25) ஆகிய 3 பேரை நசரத் பேட்டை போலீஸார் நேற்று கைது செய்தனர்.

2,882 கிலோ பறிமுதல்: மேலும் அவர்களிடம் இருந்து 2,882 கிலோ குட்கா, 2 சுரக்கு வாகனங்களை போலீஸார் பறிமுதல் செய்தனர். விசாரணை யில் அவர்கள் ஆந்திர மாநிலத்தில் இருந்து குட்காவை கடத்தி வந்து செங்கல்பட்டு மாவட்டத்துக்கு கொண்டு செல்வது தெரியவந்தது.

போலீஸாரின் விசாரணைக்கு பிறகு 3 பேரையும் பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்ற உத்தரவின்படி அவர்களை போலீஸார் புழல் சிறையில் அடைத்தனர்.

## கள்ளச் சந்தையில் காஸ் சிலிண்டர் விற்பனை: திருவான்மியூரில் தந்தை, மகன் கைது

திருவான்மியூரில் கள்ளச் சந்தையில் காஸ் சிலிண்டர்களை விற்பனை செய்த தந்தை, மகனை போலீஸார் கைது செய்து 40 சிலிண்டர்களை பறிமுதல் செய்தனர்.

சென்னை, திருவான்மியூர், சித்திரை குளத் தெருவில் உள்ள ஒரு வீட்டில், வணிக மற்றும் வீட்டு உபயோக சிலிண்டர்கள் சட்ட விரோதமாகப் பதுக்கப்பட்டு, கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகத் திருவான்மியூர் போலீஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதனடிப்படையில், நேற்று முன்தினம் அந்த வீட்டில் போலீஸார், சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அந்த வீட்டை ஒரு சிறிய கிடங்கு போல மாற்றி, அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஏராளமான சிலிண்டர்களைக் கண்டு போலீஸார் அதிர்ச்சியடைந்தனர். இது தொடர்பாக, அதே பகுதியைச் சேர்ந்த நீலமேகம் (80) மற்றும் அவரது மகன் குமார் (41) இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தினர்,

இருவரும் வீட்டு உபயோக சிலிண்டர்களைப் பதுக்கி, தட்டுப்பாடு நிலவும் சமயங்களில் தேவையுள்ளவர்களுக்கு ரூ.3 ஆயிரத்துக்கும், வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்களை ரூ.6,000 முதல் ரூ.7,000 வரை விற்று வந்தது விசாரணையில் அம்பலமானது.

தொடர்ந்து, வீட்டில் இருந்து 32 வீட்டு உபயோக சிலிண்டர்கள் மற்றும் 8 வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்கள் என மொத்தம் 40 சிலிண்டர்களை போலீ ஸார் பறிமுதல் செய்தனர். கைதான நீலமேகம் மற்றும் குமார் ஆகிய இருவரையும் திருவான்மியூர் போலீஸார், சிவில் சப்ளை சிஐடி போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

# கால்நடை அவசர சிகிச்சைக்கு செல்லும் களப்பணியாளர்கள் முன்அனுமதி பெற வேண்டும் என்ற உத்தரவுக்கு தடை

**சென்னை, மே.04:** பாதிக்கப்படும் கால்நடைகளின் அவசர சிகிச்சைக்கு செல்லும் களப்பணியாளர்கள் உயரதிகாரிகளிடம் முன்அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என்ற கால்நடைத்துறை இயக்குநரின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்துள்ள உயர் நீதிமன்றம், இதுதொடர்பாக தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிட்டுள்ளது.



திருவண்ணாமலை மாவட்ட கால்நடை உதவி மருத்துவர்கள் சங்கச் செயலாளரான டாக்டர் ஏ.செந்தில்குமார், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருந்ததாவது: கால்நடை விவசாயிகளுக்கு தக்க நேரத்தில் ஆலோசனை வழங்கவும், நிர்வாக வசதிகளுக்காகவும் தமிழக கால்நடைத்துறையில் 'கால்நடை வளம்' என்ற மொபைல் செயலி கடந்த மார்ச் மாதம் அறிமுகம் செய்யப்பட்டது.

இந்த செயலி மூலமாக கால்நடை விவசாயிகள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும், துறையின் பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளையும் உடனுக்குடன் கால்நடை மருத்துவர்களிடம் கேட்டு விளக்கம் பெற முடியும்.

அவசர காலகட்டங்களில் கால்நடை மருத்துவர்களை அணுக முடியும் என்றாலும், கால்நடை மருத்துவர்கள் உள்ளிட்ட அனைத்து களப் பணியாளர்களும் தங்களுக்கான வருகைப்பதிவேட்டை அந்தந்த கால்நடை மருத்துவமனைகளில் இருந்து இந்த செயலி வாயிலாக காலை மற்றும் மாலை வேளைகளில் முக வருகைப்பதிவேடு மூலமாக பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒருவேளை அலுவல் ரீதியாக வெளியூர் சென்றாலோ அல்லது களப்பணி ஆய்வு, முகாம் அல்லது கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் காரணமாக அவசரப் பணியாக வெளியே செல்ல நேரிட்டாலும், இந்த செயலி மூலமாக காரணத்தை தெரிவித்து உயரதிகாரிகளிடம் முன்அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

கால்நடை மருத்துவர்கள் உள்ளிட்ட களப்பணியாளர்கள் அவசர காலகட்டங்களில் ஒவ்வொரு முறையும் உயரதிகாரிகளிடம் முன்அனுமதி பெற்றே செல்ல வேண்டுமென்றால் கால்நடைகளின் இறப்பு சதவீதம் அதிகரித்துவிடும். மேலும், இதுபோன்ற முக வருகைப்பதிவேடு நிர்வாக பணியாளர்களுக்கு கட்டாயமாக்கப்படவில்லை என்பதும் ஒருதலைபட்சமானது.

எனவே, களப்பணியாளர்களுக்கு மட்டும் கால்நடை வளம்செயலி மூலமாக முக வருகைப்பதிவேடு செய்ய வேண்டும் என்றும், அவசர காலகட்டங்களிலும் முன்அனுமதி பெற்றே வெளியேசெல்ல வேண்டும் என்றும் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி பி.டி.ஆஷா முன்பாக விசாரணைக்குவந்தது. அப்போது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் ஆர்.மகேஸ்வரியும், அரசு தரப்பில் சிறப்பு அரசுவழக்கறிஞர் டி.சந்திரசேகரனும் ஆஜராகி வாதிட்டனர். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, அவசரப் பணி, கள ஆய்வு மற்றும் முகாம்களுக்கு செல்லும் கால்நடைத்துறை களப்பணியாளர்கள் முன்அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என்ற உத்தரவுக்கு மட்டும் இடைக்காலத் தடை விதித்துள்ளார். மேலும், இந்த வழக்கில் அரசு தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஜூலை 8-ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளார்.

# மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்: இன்று 400 பரிவார தெய்வங்களுக்கு பாலாலயம்

**மதுரை, மே.04:** மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உலக புகழ் பெற்றது. கடந்த 2018-ம் ஆண்டு நடந்த தீ விபத்தில் கோவிலின் வீரவசந்தராயர் மண்டபம் சேதமடைந்தது. அதனை சீரமைக்க அரசு நிதி ஒதுக்கி அந்த பணிகள் தாமதமாகி கொண்டிருந்தது. மேலும் கோவில் கும்பாபிஷேகத்தை நடத்தவும் நிர்வாகம் முடிவு செய்தது. ஆனால் வீரவசந்தராயர் மண்டப பணிகளை முடிக்காமல் கும்பாபிஷேகத்தை நடத்த கூடாது என்று பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். எனவே மண்டப பணிகளை விரைந்து முடிக்க அரசு உத்தரவிட்டது.

அதன்படி தற்போது மண்டபத்தில் உள்ள 73 தூண்கள் பொருத்தப்பட்டுள்ளன. மீதமுள்ள 6 தூண்கள் பொருத்தும் பணி இந்த மாத இறுதியில் நிறைவு பெறும். இதன் மூலம் மண்டப பணிகள் நிறைவடையும் தருவாயில் இருப்பதால் மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் செப்டம்பர் மாதம் 17-ந்தேதி நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மேலும் கும்பாபிஷேகத்தையொட்டி கோபுரத்தில் வர்ணம் பூசும் பணி மற்றும் வெளிபுரத்தில் உள்ள பணிகள் அனைத்தும் நிறைவுப்பெற்றது. எனவே கோவிலில் உள்ள உப சன்னதியில் சீரமைப்பு பணிகளை தொடங்க கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அதன்படி மீனாட்சி அம்மன் சன்னதி, சுந்தரேசுவரர் சன்னதியை தவிர கோவிலில் உள்ள சுமார் 400-க்கும் மேற்பட்ட பரிவாரதெய்வங்களுக்கான பாலாலய பூஜை நாளை (திங்கட்கிழமை) நடக்கிறது.

இதில் நடராஜர், துர்க்கை, லட்சுமி உள்ளிட்ட 400-க்கும் மேற்பட்ட பரிவாரதெய்வங்களை சித்திரமாக வரைந்து, அதில் அந்த தெய்வங்களை உருவேற்றுவார்கள். அதன்பின்னர் பரிவார தெய்வங்கள் உள்ள சன்னதிகளில் சீரமைப்பு பணிகள் தொடங்கப்படும். பாலாலய பூஜைக்கான யாகசாலை பூஜைகள் ஸ்தானிக பட்டர்கள் ஹலாஸ், செந்தில் பட்டர் தலைமையில் நேற்று தொடங்கியது.

இந்நிலையில் நாளை காலை 9 மணிக்கு மேல் யாகசாலையில் பூஜிக்கப்பட்ட கலசங்கள் புறப்பாடு நடந்து, 9.30 மணிக்கு பரிவார தெய்வங்களுக்கான பாலஸ்தான கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் இணை கமிஷனர் சுரேஷ் தலைமையில் பணிகள் நடந்து வருகின்றன.

# ராஜஸ்தானில் சென்னை போலீஸார் மீது வழக்குப் பதிவு: விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய தமிழக டிஜிபி உத்தரவு

**சென்னை, மே.04:** யானைக்கவுனி நகை திருட்டு வழக்கு தொடர்பாக விசாரணை நடத்தப்பட்ட ராஜஸ்தான் நகைக் கடை உரிமையாளர் தற்கொலைசெய்துகொண்டார். இது தொடர்பாக, சென்னை போலீஸார் மீது ராஜஸ்தான் காவல்துறை தற்கொலைக்கு தூண்டியதாக வழக்குப் பதிவு செய்துள்ளது சம்பவம் குறித்து, விரிவான விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு, சென்னை காவல் ஆணையருக்கு, தமிழக டிஜிபி உத்தரவிட்டுள்ளார்.

சென்னை, யானைக்கவுனி என்எஸ்சி போஸ் சாலையில் உள்ள ஒரு நகைக்கடையில் கடந்த மாதம் 2 கிலோ தங்க நகை கொள்ளையடிக்கப்பட்டது. இதுதொடர்பாக யானைக்கவுனி குற்றப்பிரிவு போலீஸார் நடத்திய விசாரணையில், கடையில் வேலை பார்த்த ராஜஸ்தானைச் சேர்ந்த சக்தி சிங் (26) மற்றும் அவரது கூட்டாளி லட்சுமணன் சிங் (27) ஆகியோர் திருடியது சிசிடிவி மூலம் உறுதியானது.

தனிப்படை போலீஸார் ராஜஸ்தான் மாநிலம் பாலி மாவட்டத்துக்கு விரைந்து சென்று லட்சுமணன் சிங்கை கைது செய்தனர். அவரிடமிருந்து 60 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. லட்சுமணன் சிங்கின் செல்போனை ஆய்வு செய்த போது, அவர் ராஜஸ்தானில் 'கே.கே. ஜுவல்லர்ஸ்' என்ற கடையை நடத்தி வரும் வர்தா ராம் குர்ஜர் என்பவருக்குப் பலமுறை ஆன்லைன் மூலம் பணம் அனுப்பியது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும், வர்தா ராம் ஏற்கெனவே சென்னையில் 750 கிராம் தங்கக் காசுகள் திருடிய வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளி வந்தவர் என்பதும் தெரிய வந்தது.

இதையடுத்து, மீண்டும் விசாரணைக்காக ராஜஸ்தான் சென்ற சென்னை தனிப்படை காவலர்கள் பாக்ரி காவல் நிலையத்தில் வர்தா ராமிடம் விசாரணை நடத்தினர். அதில் போலீஸாருடன் வந்த தொழிலதிபர் மகாவீர் மேத்தா மற்றும் அவரது ஆட்கள் வர்தா ராமைத் தொடர்பு கொண்டு மிரட்டியதாகக் கூறப்படுகிறது. ஒரு கிலோ தங்கம் தரவில்லை என்றால், உன்னைக் கொலை செய்து பொய் வழக்கில் உள்ளே தள்ளுவோம் என்று மிரட்டியதாகத் தெரிகிறது.

இதனால், மனமுடைந்த வர்தா ராம், தனது சகோதரருக்கு ஒரு வாட்ஸ்- அப் ஆடியோவை அனுப்பிவிட்டு விஷம் அருந்தினார். அவரைத் தடுக்க முயன்ற சகோதரர் புத்தா ராமும் விஷம் குடித்தார். ஜோத் பூர் எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி வர்தா ராம் உயிரிழந்தார். இச்சம்பவத்தால் ஆத்திரமடைந்தவர் தாராமின் உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

உயிரிழந்தவரின் மனைவி கிரண் தேவி அளித்த புகாரின் பேரில், 5 பேர் மீது தற் கொலைக்குத் தூண்டுதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் ராஜஸ்தான் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இது குறித்து விரிவான விசாரணை நடத்தி, முழுமையான அறிக்கையை தாக்கல் செய்ய சென்னை காவல் ஆணையருக்கு, தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் (டிஜிபி) உத்தரவிட்டுள்ளார்.

# கன்னியாகுமரி: மேக மூட்டத்தால் சூரிய உதய காட்சிகளை கண்டு ரசிக்க முடியாமல் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம்



**கன்னியாகுமரி, மே.04:** சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். விடுமுறை நாட்களிலும், பண்டிகை நாட்களிலும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கன்னியாகுமரிக்கு வருவார்கள்.

இந்தநிலையில் இன்று ஞாயிறு விடுமுறையையொட்டி காலையில் இருந்தே கன்னியாகுமரியில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர். அவர்கள் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை, சன்ரைஸ் பாயின்ட் போன்ற பகுதிகளில் நள்ளிரவு முதல் சூரிய உதயத்தை கண்டு ரசிக்க காத்திருந்தனர்.

இன்று காலையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதால் சூரிய உதயத்தை காணமுடியாமல் சுற்றுலா பயணிகள் ஏமாற்றமடைந்தனர்.

அதைத்தொடர்ந்து சுற்றுலா பயணிகள் முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். படகுத்துறையில் இருந்து சுற்றுலா பயணிகள் கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை படகில் சென்று பார்த்து ரசித்து வருகின்றனர். காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், சுனாமி நினைவுப் பூங்கா, கடற்கரை சாலையில் உள்ள தமிழன்னை பூங்கா, சன்செட் பாயிண்ட், அரசு அருங்காட்சியகம், சுற்றுச்சூழல் பூங்கா உள்பட அனைத்து இடங்களிலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது.

கடற்கரையில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகமாக இருந்ததால் போலீசாரும், கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும், சுற்றுலா பாதுகாவலர்களும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ஜபல்பூர் படகு விபத்தில் உயிரிழந்த 5 பேரில் இருவர் உடல்கள் விமானம் மூலம் திருச்சி கொண்டுவரப்பட்டன

**திருச்சி, மே.04:** மத்திய பிரதேசம் ஜபல்பூர் பர்கி அணையில் படகு மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்த நிலையில் 2 பேரின் உடல்கள் திருச்சி வந்தன.



திருச்சி மாவட்டம் நவல்பட்டு அண்ணா நகரைச் சேர்ந்தவர் காமராஜ் (39). மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூர் கமேரியாவில் உள்ள மத்திய அரசின் வெடிமருந்து தொழிற்சாலையில் பணியாற்றி வந்தார். இவரது மனைவி திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மூலனூரைச் சேர்ந்த கார்குழலி. இவர்களது மகன்கள் புவிதரன் (11), தமிழ்வேந்தன் (6).

இதில், தமிழ்வேந்தனுக்கு மே 7-ம் தேதி பிறந்த நாள் வருகிறது. பிறந்தநாளை கொண்டாடுவதற்காக கார்குழலியின் தாய், தந்தை, சகோதரர் பரிமேலழகர், இவரது மனைவி சவுபாக்கியம், மகன் மயூரன், மகள் இனியா ஆகியோர் ஜபல்பூர் சென்றிருந்தனர். அங்கு ஏப்.30-ம் தேதி மாலை ஜபல்பூர் பர்கி அணையில் அனைவரும் படகு சவாரி சென்ற போது படகு கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது.

இதில் காமராஜ், கார்குழலி, தமிழ்வேந்தன், சவுபாக்கியம், மயூரன் ஆகியோர் நீரில் மூழ்கினர். பரிமேலழகர், புவிதரன், இனியா ஆகியோர் உயிர் தப்பினர். கார்குழலியின் பெற்றோர் படகில் செல்லாத நிலையில் அவர்களும் உயிர் தப்பினர். கார்குழலி, சவுபாக்கியம் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், காமராஜ், தமிழ்வேந்தன், மயூரன் ஆகியோரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து தகவலறிந்த திருச்சி எம்.பி. துரை வைகோ, ஜபல்பூர் மாவட்ட ஆட்சியர் ராகவேந்திரா சிங்கை தொடர்பு கொண்டு பேசியுள்ளார். இதுபற்றி துரை வைகோ கூறும்போது, “ஹெலிகாப்டர் உதவியுடன் ராணுவத்தினர், மாநில பேரிடர் மீட்புப் படை, காவல் துறை, உள்ளூர் மீனவர்கள், மாவட்ட நிர்வாகம் இணைந்து இரவு பகலாக தேடுதல் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், விரைவில் அனைவரது உடல்களையும் மீட்டு விடுவோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, திருச்சிக்கு கொண்டு வரப்படும் கார்குழலி, சவுபாக்கியம் ஆகியோர் உடல்களை அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்க ஆம்புலன்ஸ் வசதி ஏற்படுத்தி தந்துள்ள திருச்சி மாவட்ட ஆட்சியர் வே.சரவணன், மத்திய பிரதேசத்தில் மீட்புப் பணிகளில் உதவி புரிந்து வரும் தமிழரான ஐஏஎஸ் அதிகாரி இளையராஜா ஆகியோருக்கு நன்றி” என்றார். இதனிடையே இருவரது உடல்களும் பாதுகாப்புத் துறை விமானத்தில் நேற்றிரவு திருச்சி விமான நிலையம் கொண்டுவரப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

# பாபநாசம் அகஸ்தியர் அருவியில் ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீர்

## சுற்றுலா பயணிகள் உற்சாக குளியல்



**நெல்லை, மே.04:** நெல்லை மாவட்டத்தில் உள்ள சுற்றுலா தலங்களில் பாபநாசம் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள அகஸ்தியர் அருவியும் ஒன்றாகும். இங்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால் மிகவும் பிரசித்தி பெற்றது ஆகும். தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்கின்றனர்.

தற்போது கோடையில் கடும் வெயில் சுட்டெரிக்கும் நிலையிலும், அகஸ்தியர் அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது. இதனால் கடந்த சில நாட்களாக அகஸ்தியர் அருவிக்கு செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மே தினம், சனி, ஞாயிறு என தொடர் விடுமுறையையொட்டி அகஸ்தியர் அருவியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். அவர்கள் கார், வேன்களில் குடும்பத்தினர், உறவினர்களுடன் வந்தனர். அவர்கள் ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவியில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

# வீட்டின் பூட்டை உடைத்து 36 சவரன் நகைகள் கொள்ளை: மர்ம நபர்களுக்கு போலீசார் வலைவீச்சு

**திண்டுக்கல், மே.04:** திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே உள்ள கோவில்பட்டியைச் சேர்ந்தவர் ஜீவானந்தம் (வயது 42). இவரது மனைவி பவித்ரா(35). ஜீவானந்தம் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்ததால் அவரது மனைவி பவித்ரா தனியாக வசித்து வந்தார். இந்த நிலையில் பவித்ரா கடந்த 28-ம் தேதி வீட்டை பூட்டிவிட்டு தனது தாய் வீட்டிற்கு சென்றுவிட்டார்.

நேற்று முன்தினம் மாலையில் மீண்டும் வீட்டிற்கு வந்தார். அப்போது வீட்டு கதவின் பூட்டு உடைக்கப்பட்டு கிடந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அவர் உள்ளே சென்று பார்த்தார்.

அப்போது ஒரு அறையில் இருந்த பீரோ உடைக்கப்பட்டு, அதில் இருந்த தங்க சங்கிலி, மோதிரங்கள், வளையல், தோடு என மொத்தம் 36½ சவரன் தங்க நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது.

இந்த கொள்ளை குறித்து நத்தம் போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்ம நபர்களை வலைவீசி தேடி வருகின்றனர்.

# மெட்ரோ ரயிலில் ஏப்ரலில் 90.18 லட்சம் பேர் பயணம்

**சென்னை, மே.04:** மெட்ரோ ரயிலில் ஏப்ரல் மாதத்தில் 90.18 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். சென்னையில் 2 வழித் தடங்களில் 54 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி 3 லட்சம் பேர் பயணம் செய்கின்றனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயில்களில் நடப்பாண்டில் ஏப்ரல் மாதத்தில் 90.18,069 பேர் பயணம் செய்துள்ளனர். இம்மாதத்தில் அதிகபட்சமாக. ஏப்.2ம் தேதி 3,65,807 பேர் பயணம் செய்துள்ளனர். சிங்காரசென்னை அட்டையை பயன்படுத்தி 45.18,247 பேரும், பயண அட்டைகளை பயன்படுத்தி 25,659 பேரும், க்யுஆர் குறியீடு பயணச் சீட்டைப்பயன்படுத்தி 44,74,163 பேரும் பயணம் செய்துள்ளனர்.

டிஜிட்டல் எஸ்விபி, க்யுஆர் குறியீடு பயணச்சீட்டு, வாட்ஸ்- அப் மற்றும் சிங்கார சென்னை அட்டை பயணச் சீட்டுகளை பயன்படுத்தி மெட்ரோ ரயில்களில் பயணிப்பவர்களுக்கு 20 சதவீதம் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மெட்ரோ ரயில் நிலைய கவுன்ட்டர்களில் வாங்கப்படும் காகித க்யூஆர் பயணச்சீட்டுகளுக்கு இந்த தள்ளுபடி கிடையாது என மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சென்னை: விமானத்தின் அவசரகால கதவை திறந்து கீழே குதித்த பயணி

**சென்னை, மே.04:** ஐக்கிய அரபு அமீரகத்தின் சார்ஜாவில் இருந்து சென்னைக்கு இன்று அதிகாலை ஏர் அரேபியா விமானம் வந்தது. விமானத்தில் 231 பயணிகள் பயணித்தனர்.

சென்னை விமான நிலையம் வந்த உடன் பயணிகளை இறக்கும் இடத்திற்கு விமானம் மெதுவாக சென்றது. அப்போது திடீரென விமானத்தின் அவசர கால கதவை திறந்த பயணி விமானத்தில் இருந்து கீழே குதித்து ஓடுதளத்தில் ஓடினார்.

இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த விமானி உடனடியாக இதுகுறித்து விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தார்.

இதையடுத்து விரைந்து செயல்பட்ட பாதுகாப்புப்படையினர், ஓடுதளத்தில் ஓடிய அந்த பயணியை விரட்டிப்பிடித்தனர். பின்னர், அவரிடம் பாதுகாப்புப்படையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முதற்கட்ட விசாரணையில் அந்தபயணி புதுக்கோட்டையை சேர்ந்த நிஜாமுதீன் ஷெரீப் (வயது 34) என்பது தெரியவந்துள்ளது. விமானத்தின் அவசர கால கதவை திறந்து கீழே குதித்து ஓடியதற்கான காரணம் குறித்து நிஜாமுதீன் ஷெரீப்பிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பி.இ., பி.டெக் படிப்புகளுக்கு ஆன்லைன் விண்ணப்பப்பதிவு தொடக்கம்: ஜூன் 2 வரை மாணவர்கள் விண்ணப்பங்களை பதிவு செய்யலாம்!

**சென்னை, மே.04:** பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளுக்கான தேர்வு முடிவுகள் விரைவில் வெளியாக உள்ளது.

இப்போது இருந்து மேற்படிப்புகள் தொடர்பாக பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்கள் ஆயத்தமாகி வருகின்றனர். இந்நிலையில் பி.இ. மற்றும் பி.டெக் விண்ணப்பப் பதிவு ஆன்லைனில் தொடங்கியுள்ளது.



மாணவர்கள் இதற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள www.tneaonline.org என்ற இணையதளத்தின் வாயிலாகத் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம்.

அரசு ஒதுக்கீடு இடங்களில் சேர்வதற்கான கலந்தாய்வில் பங்கேற்க இன்று முதல் ஜூன் 2 வரை விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் பதிவின் போது மாணவர்கள் தங்களின் அடிப்படை விவரங்கள், மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் சாதிச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களை மின்வருடல் (Scan) செய்து பதிவேற்ற வேண்டும். இணையதள வசதி இல்லாத மாணவர்களுக்காக தமிழ்நாடு முழுவதும் 110 பொறியியல் சேர்க்கை மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1800 425 0110, theacare@gmail.com மூலம் சந்தேகங்களை நிவர்த்தி செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப் பதிவு முடிந்தவுடன் மாணவர்களின் கட்-ஆஃப் மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு, அதன் பின்னரே இணையவழி கலந்தாய்வு (Online Counselling) பல்வேறு சுற்றுகளாக நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடர் விடுமுறையையொட்டி வடநெம்மேலி முதலை பண்ணையில் குவிந்த சுற்றுலா பயணிகள்



**சென்னை, மே.04:** மாமல்லபுரம் அடுத்த, வடநெம்மேலி முதலை பண்ணையில் முதலைகளுக்கு உணவு வழங்குவதை சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர். மாமல்லபுரம் அடுத்த வடநெம்மேலி கிழக்கு கடற்கரை சாலையையொட்டி முதலை பண்ணை இயங்கி வருகிறது. இங்கு நாட்டில் உள்ள பல்வேறு முதலை வகைகளான அமெரிக்காவில் உள்ள அலிகேட்டர், உப்பு நீரில் வாழும் முதலைகள் உள்ளிட்ட அரியவகை முதலைகள் குளத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதேபோல், அமேசான் மற்றும் ஆப்பிக்க காடுகளில் உள்ள நீர் நிலைகளில் வாழ்ந்து, மனிதர்களை அப்படியே விழுங்கும் மிகப்பெரிய ராட்சத முதலைகளும் இங்குள்ளன.

இந்நிலையில், தமிழ்நாட்டில் பள்ளிகளுக்கு தொடர் கோடை விடுமுறையொட்டி சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை சேர்ந்த ஏராளமான சுற்றுலாப் பயணிகள் நேற்று காலை முதல் மாலை வரை குடும்பம், குடும்பமாக முதலை பண்ணையில் குவிந்தனர். முன்னதாக, நுழைவு கட்டணம் செலுத்திய பின்னர் முதலைகளை சுற்றிப் பார்க்க அனுமதிக்கப்பட்டனர். அப்போது, முதலை பண்ணை ஊழியர்கள் முதலைகள், பச்சை ஓணான்கள், மலைபாம்புகளுக்கு உணவு அளிப்பதை சுற்றுலாப் பயணிகள் ஆச்சரியத்துடன் கண்டு மகிழ்ந்தனர். தொடர்ந்து, முதலைகள் வெளியே வராமல் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள கம்பி வேலிகள் அருகே நின்று செல்பி மற்றும் புகைப்படம் எடுத்தும் மகிழ்ச்சி அடைந்ததை காணமுடிந்தது.

மேலும், ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வடநெம்மேலியில் குவிந்ததால், முதலை பண்ணை வளாகம் களைகட்டி காணப்பட்டது. பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால், ஏராளமானோர் முதலை பண்ணையில் குவிந்து வருகின்றனர். இதனால், கோவளம் வரை இயக்கப்படும் அனைத்து மாநகர பேருந்துகளையும் மே 31ம் தேதி வரை வடநெம்மேலி முதலை பண்ணை வரை இயக்க மாநகர போக்குவரத்து கழக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுலா பயணிகள் வலியுறுத்தி உள்ளனர்.

# போச்சம்பள்ளி அருகே பனை மரத்திலிருந்து தவறி விழுந்து மாணவன் உயிரிழப்பு

**போச்சம்பள்ளி, மே.04:** பள்ளி விடுமுறை நாளில் நுங்கு வெட்டுவதற்காக பனை மரத்தில் ஏறிய 10-ம் வகுப்பு மாணவன், தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த பண்ணந்தூர் அருகேயுள்ள பாப்பாரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் கௌவரன் இவரது மகன் நந்தகுமார் (15). இவர் அரசம்பட்டி பகுதியில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 10-ம் வகுப்பு பயின்று வந்தார்.



பள்ளி விடுமுறை என்பதால், மாலை 6:30 மணியளவில் நந்தகுமார் தனது தந்தையின் நிலத்திற்கு அருகில் உள்ள அப்பாஸ் என்பவருக்குச் சொந்தமான நிலத்தில் இருந்த பனை மரத்தில் நுங்கு வெட்டுவதற்காக ஏறியுள்ளார். மரத்தின் உச்சாணிக் கிளையில் நுங்கு வெட்டிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக நந்தகுமார் பிடி நழுவி கீழே விழுந்தார். இதில் அவருக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அவரது தந்தை கௌவரன் மற்றும் கல்லூரியில் பயிலும் அவரது சகோதரிகள் ஹரிணி, கோமதி ஆகியோர் உடனடியாக நந்தகுமாரை மீட்டு தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு மாணவனைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர். இச்சம்பவம் குறித்து பாரூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், மாணவனின் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக போச்சம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பள்ளி மாணவன் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## அரசியல் கார்னர்

# மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையில் திருப்தி இல்லை என்பது திமுக தலைமைக்கும் தெரியும்: பெ.சண்முகம் விளக்கம்

**சென்னை, மே.04:** மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையில் திருப்தி இல்லை என்பது திமுக தலைமைக்கும் தெரியும் என, தொகுதி பங்கீடு குறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் விளக்கமளித்துள்ளார்.


ரயில்வே துறையில் 30 ஆயிரம் பணியிடங்களை குறைக்கும் ரயில்வே வாரியத்தின் சுற்றறிக்கையை திரும்பப் பெற வலியுறுத்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தென் சென்னை மாவட்டக் குழு சார்பில், கிண்டி ரயில் நிலையம் முன்பு கிளர்ச்சி பிரச்சாரம் நடைபெற்றது. கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் தலைமை தாங்கி, பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திமுக அரசு வேலை வாய்ப்பின்மைக்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இடதுசாரிகளுக்கு உரிய அங்கீகாரம் கொடுக்கவில்லை என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் கே.பாலகிருஷ்ணன் கூறியிருந்தார். அவரது பேட்டியை நான் நேரடியாக பார்க்கவில்லை. ஊடகங்களில் வந்ததை தான் பார்த்தேன். சட்டப்பேரவை தேர்தலில் இடது சாரி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை சம்பந்தமாக எங்களுக்கு திருப்தி இல்லை என்பதை, அப்போதே நான் வெளிப்படுத்தி இருக்கிறேன். அது திமுக தலைமைக்கும் தெரியும்.

தொகுதி உடன்பாடு ஏற்படுவதற்கு முன்பாக எங்களுக்கு இருந்த கருத்துக்கள் என்பது வேறு. ஆனால், அதன்பின் அனைவரும் ஏற்றுக்கொண்டு உடன்பாடு ஏற்பட்ட பிறகு, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றிக்கு, கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளுடன் இணைந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சிறப்பாக பாடுபட்டிருக்கிறது. அந்த வகையில், இந்த அணியின் வெற்றி என்பது தான் எங்களுடைய எதிர்பார்ப்பு. அந்த எதிர்பார்பை பூர்த்தி செய்யும் வகையில் வரும் மே.4ம் தேதி வெளியாகும் தேர்தல் முடிவுகள் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

சமீபத்தில் வெளியான கருத்து கணிப்புகள் யாவும் கருத்து கணிப்புகள் அல்ல, அவை கருத்து திணிப்புகளாகும். ஒவ்வொரு நிறுவனங்களும் தங்களை யார் பணியமர்த்தினார்களோ, அவர்களை திருப்தி செய்யக் கூடிய வகையில் கணிப்புகளை வெளியிட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

# தேர்தல் முடிவுகள் நாளை வெளியாக உள்ள நிலையில் குதிரை பேரத்தை தடுக்க விஜய் முக்கிய ஆலோசனை



**சென்னை, மே.04:** நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தவெக முதல்முறையாகத் தனித்துப் போட்டியிட்டுள்ளது. கட்சியின் தலைவர் விஜய், பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய 2 தொகுதிகளில் போட்டியிடுவதால், அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

நிர்வாகிகளுடன் ஆலோசனை: சமீபத்தில் வெளியான பல்வேறு கருத்துக் கணிப்புகள் திமுகவுக்கு சாதகமாக இருப்பதாகத் தெரிவித்தாலும், கள நிலவரம் தங்களுக்குச் சாதகமாக இருப்பதாக தவெக நம்புகிறது. இச்சூழலில், வெற்றி பெறும் தவெக வேட்பாளர்களை 'குதிரை பேரம்' மூலம் தங்கள் பக்கம் இழுக்க திமுக மற்றும் அதிமுக திட்டமிட்டிருப்பதாக விஜய்க்கு ரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன.

இதையடுத்து, விஜய் கடந்த 2 நாட்களாக தனது கட்சியை சேர்ந்த முக்கிய நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார். இதுகுறித்து தவெக வட்டாரங்கள் கூறியதாவது: திமுக, அதிமுகவின் குதிரை பேரம் மூலம் இழுக்கும் நடவடிக்கையை முறியடிக்க சமீபத்தில், 234 தொகுதி வேட்பாளர்களுடனும் விஜய் அவசர ஆலோசனை நடத்தினார்.

"வெற்றிச் சான்றிதழ் பெற்றவுடன் நேராகப் பனையூர் தலைமை அலுவலகத்துக்கு வர வேண்டும்" என அவர் அப்போது உத்தரவிட்டுள்ளார். வாக்குப்பதிவு நாளன்று சில இடங்களில் திமுக, அதிமுகவினர் இடையூறுகளை ஏற்படுத்தக் கூடும் என விஜய்க்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்துதான், தலைமை தேர்தல் அதிகாரியைச் சந்தித்து, வாக்கு எண்ணும் மையங்களில் கூடுதல் பாதுகாப்பு கோரி மனு அளிக்குமாறு ஆதவ் அர்ஜுனாவுக்கு உத்தரவிட்டார். அதன்படிதான், அவர் நேற்று மனு அளித்திருந்தார்.

வேட்பாளர்கள் பத்திரம்: இதையடுத்து, வாக்கு எண்ணிக்கையின் போது ஏதேனும் அச்சுறுத்தலோ, நெருக்கடியோ ஏற்பட்டால், வேட்பாளர்கள் தனக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம் என விஜய் தெரிவித்துள்ளார். இதற்காக ஒரு பிரத்யேக எண் வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் மற்றும் ஆதவ் அர்ஜுனா ஆகியோரிடம், "நமது வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் பத்திரம். அவர்களைப் பாதுகாப்பாகப் பனையூருக்குக் கொண்டு வந்து சேர்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு" என விஜய் அழுத்தமாகக் கூறியுள்ளார். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# வணிக பயன்பாட்டிற்கான எரிவாயு விலை உயர்வு - வைகோ கண்டனம்

**சென்னை, மே.04:** ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வணிக பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் கடந்த மார்ச் மாதம் ரூ.144 ரூபாயும், ஏப்ரல் மாதம் 203 ரூபாயும் உயர்த்தப்பட்டது. இந்த நிலையில், நேற்று மே 1-ந்தேதி சிலிண்டர் விலை 993 ரூபாய் உயர்த்தப்பட்டு 3,239 ரூபாயாக விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க - ஈரான் போரால் பன்னாட்டு சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வை காரணம் காட்டி ஒன்றிய பாஜக அரசு வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலையை ஒரேடியாக சுமார் 1000 ரூபாய் அதிகரித்து இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

கடந்த இரண்டு மாதங்களாக சமையல் எரிவாயு வினியோகம் தடைப்பட்டதால் உணவகங்கள் கடுமையாக பாதிப்பு அடைந்ததுடன், உணவுப் பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்து விட்டது.

இந்நிலையில் வணிகப் பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை உயர்வு பொதுமக்களை கடுமையாக பாதிக்கும். உடனடியாக ஒன்றிய அரசு இந்த விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM